ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

27.01.2010 - மலர் 06, இதழ் 47

## 100 மடங்கு பெரிய சூரியன் கண்டுபிடிப்பு

## ஜனாதிபதியை தேர்ந்தெடுத்தல் எவ்வாறு நடைபெறுகின்றது

இரு பக்க சிறப்புக் கட்டுரை



## அழிவடையும் கடல் ஆமைகளை பாதுகாக்கும் வழிமுறைகள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒல்லாந்த பிரதேசத்தில் பிரான்சிய கோட்டை

**கி.பி.** 1644 இல் நீர்கொழும்புக் கோட்டை போர்த்துக்கேயர் வசமே இருந்தது. அதனை ஒல்லாந்தர் தமதாக்கிக் கொள்ள பிரான்சியரே உதவினர். அவர்தான் பிரன்கொய்ஸ் கெரன் என்பவர். யுத்த களத்தில் பெரும் வீரர். ஒல்லாந்தரிடம் கூலிக்கு சேவையாற்றிய அவர் தனது தாய்நாட்டிற்கு சேவையாற்ற எண்ணினார். இலங்கையில் ஒரு துறைமுகத்தை பிரான்ஸ் நாட்டிற்காக கைப்பற்றத் தீர்மானித்தார். அது குறித்து பிரான்சிய அரசையும் அந்நாட்டு மக்களையும் அக்கறை கொள்ளச்செய்தார். அவர்களும் அதனை விரும்பினர்.

பிரான்சிய அரசு பிரன்கொய்ஸ் கெரன் அவர்களை இந்தியாவின் டிரெக்டர் ஜெனரல் (Director General) ஆக நியமித்து அனுப்பியது. அவர் 'சூரட்' பகுதியில் பிரான்சிய வர்த்தகக் களஞ்சியம் ஒன்றை ஆரம்பித்தார். போர்த்துக்கேய வியாபாரி ஒருவர் மூலம் இரண்டாம் இராஜசிங்கன் இதனை அறிந்துகொண்டான். அவன் மூலமாக கடிதப் போக்குவரத்தை வைத்துக்கொண்டான்.

இதற்கிடையில், அத்மிரல் லாகே என்பவனின் தலைமையில் பிரான்சிய அரச படைகள் கீழைத் தேசம் நோக்கி வந்தன. அவர்கள் பிரன்கொய்ஸ் கெரன் அவர்களைக் கப்பலில் ஏற்றினர். இலங்கையை நோக்கிப் பயணித்தனர். இந்தப் பிரான்சியர்கள் கி.பி 1672 மார்ச் மாதம் திருகோணமலையை வந்தடைந்தனர். இதனைக் கேள்வியுற்ற ஒல்லாந்தர் கொட்டியாரம் கோட்டையைக் கைவிட்டனர். சேனைகள் அனைத்தையும் திருகோணமலைக்கு அழைத்தனர்.

அத்மிரல் த லாகே மற்றும் கெரன் திருகோணமலை களப்பில் கோட்டையும் வர்த்தகக் களஞ்சியமொன்றையும் கட்டுவதற்குத் தீர்மானித்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# விவசாயப் பணிகளிலும் 'ரொபோக்கள்'




இதுவரை மனிதனால் செய்யப்பட்டு வந்த விவசாய நடவடிக்கைகளிலும் தற்போது ரொபோக்கள் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. இங்கிலாந்திலேயே இந்த வகை ரொபோக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

விவசாய நடவடிக்கைகளில் நாற்று நடுதல், அறுவடை செய்தல் போன்ற பணிகள் உட்பட காய்கள், பழங்களைப் பறித்தல் மற்றும் சேகரித்தல், இலைகளைப் பறித்தல் போன்ற பணிகளில் இந்த ரொபோக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவை விளைச்சல் உள்ள காய், கனிகளை தேர்ந்தெடுத்து, அவற்றை முறையாகப் பறிக்கும் ஆற்றலுள்ளவை. அத்துடன், அவற்றில் சிறிதேனும் சேதம் ஏற்படாமலும் தவறவிடாமலும் குறித்த பணிகளைத் துரிதமாக செய்து முடிக்கும் திறனைக் கொண்டுள்ளன.

விவசாய நடவடிக்கைகளில் கூலித் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதால் தவற விடுதல், சேதம் ஏற்படுதல் போன்ற காரணங்களால் ஆண்டுக்கு 60 சதவீத அளவில் இழப்புகள் ஏற்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதனால், கோடிக்கணக்கில் வருவாய் இழப்புகள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்க்கும் வகையிலேயே இந்தப் பணிகளுக்கு ரொபோக்களை அறிமுகப்படுத்தி உள்ளனர். எவ்வாறாயினும், தற்போது கூலி வேலைக்கும் ரொபோக்களால் ஆபத்து வந்துவிட்டதாகவே பலரும் கருதுகின்றனர்.



விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# நான்கு புதிய தடுப்பு மருந்துகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன



புதிய தடுப்பு மருந்து வகைகள் நான்கினை இலங்கையில் பாவனைக் குட்படுத்துவதற்கான பரிசோதனைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக கொழும்பு தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

கருப்பை புற்றுநோய், நியுமோனியா, கூகைக்கட்டு மற்றும் வாந்திபேதி போன்ற நோய்களைத் தடுக்கும் பொருட்டே இந்த தடுப்பு மருந்துகள் தொடர்பான பரிசோதனைகள் நடைபெற்று வருவதாக கொழும்பு தொற்று நோய்ப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பபா பலிஹவடன தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட நோய்கள் தொற்றிக்கொள்வதற்கு முன்னர் அதனைத் தடுத்துக்கொள்ளும் பொருட்டு, மேற்குறிப்பிட்ட புதிய தடுப்பு மருந்துகளைப் பாவித்தல் மற்றும் அதனை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பன தொடர்பிலான பரிசோதனைகளே தற்போது நடைபெற்று வருவதாகவும், இந்த பரிசோதனைகளின் பின்னர் குறித்த தடுப்பு மருந்துகளை தேசிய நோய் எதிர்ப்புசக்தி வேலைத்திட்டத்துக்கு உட்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புத்தகச் சுமையினால் மாணவர்கள் பாதிப்படைகின்றனர்

## இங்கிலாந்து தனியார் அமைப்பொன்று எச்சரிக்கை!




இன்று பாடசாலை செல்லும் மாணவர்கள் மூட்டை சுமப்பது போல் புத்தகப்பையை சுமந்து செல்வதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு செல்லும் மாணவர்களின் முதுகெலும்பும் உடல் வளர்ச்சியும் நாளடைவில் பாதிக்கப்படுவதாக இங்கிலாந்திலுள்ள தனியார் அமைப்பொன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து பொதுமக்களை குறிப்பாக, பெற்றோர்களை விழிப்புணர்வூட்டும் தொலைக்காட்சி பிரசாரமொன்றை அந்த தனியார் அமைப்பு அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. அதிக புத்தகச் சுமையை சுமந்து செல்லும்போது பிள்ளைகளின் முதுகெலும்பு பாதிப்படைகின்றது. அத்துடன், இதன்போது



பிள்ளைகளின் உடல் வளர்ச்சியிலும் பின்னடைவை காணக்கூடியதாக இருக்கும் எனவும் அந்த தனியார் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, ஒவ்வொரு பெற்றோரும் இதுகுறித்து கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அதன்படி, தங்கள் பிள்ளைகளுக்கு அன்றைய தினத்தில் என்னென்ன புத்தகங்கள் தேவை என்பதை கேட்டறிந்து, அந்தப் புத்தகங்களை மாத்திரம் பாடசாலைக்கு எடுத்துச்செல்ல இடமளிக்கவேண்டும். இதன்மூலம் பிள்ளைகள் தேவையற்ற புத்தகங்களை எடுத்துச் செல்வதைத் தவிர்க்கலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அதிக புத்தகச் சுமையுடன் செல்லும் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் பின்தங்கி விடுகின்றனர். இதற்குக் காரணம், புத்தகச் சுமையால் ஏற்படுகின்ற மன அழுத்தமாகும் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.



# பாடசாலை இலவச மதிய உணவுத்திட்டம் மேலும் ஒரு வருட காலத்தால் நீடிப்பு



பாடசாலை செல்லும் மாணவர்களின் தேகாரோக்கியத்தைக் கருத்தில்கொண்டு அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச மதிய உணவுத்திட்டம், மேலும் ஒரு வருட காலத்தால் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி, இம்மாதம் 11 ஆம் திகதி முதல் இலவச மதிய உணவுத்திட்டம் சகல பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி, இலவச மதிய உணவுத்திட்டத்திற்காக இவ்வருடம் 290 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. மாணவர்களின் தேகாரோக்கியத்தைக் கருத்தில்கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த இலவச மதிய உணவுத் திட்டத்தில், மாணவர்களின் தேகாரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு சத்துமிக்க உணவுப் பொருட்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் இணைந்து உலக உணவுத்திட்டம், சுகாதார அமைச்சு மற்றும் தேசிய அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் பங்களிப்புடன் இந்த இலவச உணவுத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள் சூழ்ந்த கடலுக்கடியில் விநோத உயிரினங்கள்



'டம்போ' எனும் 'வோல்ட் டிஸ்னி' கார்ட்டூன் பாத்திரம்.

அமெரிக்காவிற்கு அருகில் கடலின் ஆழமான பகுதியில் 17650 க்கும் அதிகமான புதிய வகை உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனை உலக சமுத்திர உயிரியல் விஞ்ஞானிகள் குழுவினர் அண்மையில் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.அவர்கள் இந்த உயிரினங்களை சூரிய ஒளி படாத 656 அடிக்கும் கூடிய ஆழமுள்ள இருள் சூழ்ந்த பகுதியிலேயே கண்டுபிடித்தனர். இந்த அபூர்வமான உயிரினங்களைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு ஏறக்குறைய பத்து வருடகாலம் எடுத்தது.

இந்த உயிரினங்களைத் தேடி சமுத்திரத்தின் அடிப்பாகத்திற்கு பலரைக் கொண்ட ஆய்வுக் குழு சென்றது. அக்குழுவிக்கு ஐக்கிய அமெரிக்காவின் லூசியானா மாநிலப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த றொபர்ட் எஸ்.கானீ என்பவரே தலைமை தாங்கினார். இவர் ஒரு கடல்வாழ் உயிரியல் விஞ்ஞானி ஆவார். இவர்களினால் கண்டுபிடிக்கப்பட்ட உயிரினங்களில் 5600 உயிரினங்கள் இதற்கு முன் ஒருபோதும் கண்டுபிடிக்கப்படாதவை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பல மில்லியன் கணக்கான உயிரினங்கள் இருள் சூழ்ந்த கடலின் அடிப்பாகத்தில் வாழ்வதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இக்கடல்வாழ் உயிரினங்களில் 'டம்போ' எனப் பெயரிடப் பட்டுள்ள ஜெலி வகையைச் சேர்ந்த மீன் இனம் ஒன்றே விஞ்ஞானிகளைப் பெரிதும் கவர்ந்த உயிரினமாகும்.

இதற்கு 'டம்போ' எனப் பெயர் வைத்ததற்கு முக்கிய மான காரணம் ஒன்று இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இந்த உயிரினத்தைப் பார்க்கும் பொழுது 'வோல்ட் டிஸ்னி' கார்ட்டூனில் வரும் பாத்திரமான பெரிய காதுகளைக் கொண்டதும் பறக்கும் ஆற்றலைக் கொண்டதுமான யானைக்குட்டியின் நினைவுதான் தமக்கு வந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இவைதவிர, மேலும் பல ஜெலி மீன் வகைகள், கடற் காளான்கள், புழு வகைகள், நட்சத்திர மீன் இனங்கள் உள்ளிட்ட பல்வேறு உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நிலத்தில் வாழும் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களில் 1.5 மில்லியன் மாத்திரமே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இருள் சூழ்ந்த கடலின் அடிப் பகுதியானது சூனியமான பாலைவனம் போன்ற தென்றும் அங்கு எதுவும் இருக்காது என்றும் ஒரு காலத்தில் நம்பப்பட்டது. எனினும், விஞ்ஞானத் தின் முன்னேற்றம் மற்றும் தொழில்நுட்பத்தின் அபிவிருத்திகளினால் மனிதனால் செல்ல முடியாத கடலின் அடிப்பகுதியைக்கூட ஆய்வு செய்ய முடிந்துள்ளது. சூனிய மயமான சமுத் திரம் என முன்னர் நம்பப்பட்ட பிரதேசங்களில் இதுவரை 20,000 இற்கும் மேற்பட்ட உயிரின வகைகள் கண்டுபிடிக்கப்பட்டமை உண்மையில் புதுமையானதொரு விடயமாகும். இன்னும் முழுமையான ஆய்விற்கு உட்படாத புவியின் ஒரே ஓர் இடம்தான் சமுத்திரத்தின் அடிப்பகுதி யாகும் என இந்த சமுத்திர ஆய்வு நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்கிய ஜேஸ் அவுஷ்பேல் குறிப்பிடுகின்றார்.

இந்த ஆய்வுகள் ஐக்கிய அமெரிக்காவின் லூசியானா மாநிலத்திற்கருகில் உள்ள ஆழமான கடலிலேயே மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட பாதாள வாசிக ளான புதிய உயிரினங்கள் வசிக்கும் பகுதிகளில் முருகைக்கல் வகைகள் மட்டும் 40 இற்கும் மேல் காணப்படுகின்றன. இந்த முருகைக்கல் பாறைகள் ஆழமான இருண்ட சமுத்திரப் பாதாளத்தில் மலை போல் குவிந்துள்ளன.



விஞ்ஞானிகளின் உள்ளம் கவர்ந்த ஜெலிபிஷ் (Fish) டம்போ.

விஞ்ஞானிகள் கண்டுபிடித்த உயிரின வகைகளில் ஒரு கலத் தினாலான உயிரின வகைகள் மாத்திரம் 500 இற்கும் அதிகமா கும். புதிய உயிரினங் களைத் தேடி மேற்கொள்ளப்பட்ட இந்த நீண்ட ஆய்வில் 80 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2000 த்திற்கும் அதிகமான விஞ்ஞா னிகள் ஈடுபட்டனர். இவர்கள் இருண்ட கடலின் ஆழமான அடிப்பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொள்வதென்பது இலகுவானதொரு விடயமல்ல.

இதற்குப் பயன்படுத்தப்பட்டதோ 'நேரியஸ்' எனும் பெயரைக் கொண்ட மஞ்சள் நிற சிறிய ஆய்வுக்கான 'ரொபோ' நீர்மூழ்கி ஆகும். இந்த நீர்முழ்கி தொலைவில் இருந்து இயக்கக்கூடி யதாகும். இந்நீர்மூழ்கியை ஆய்வு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தும்பொழுது நாளொன்றிற்கு 50,000 அமெரிக்க டொலர்கள் செலவாகின்றன. புதிய உயிரினங்களைக் கண்டுபிடிப்பதற்காக மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வுகள் இன்னும் முற்றுப் பெறவில்லை. அவை முடிவடைந்த பின்னர் கடல்வாழ் உயிரினங்களை அடிப்படையாகக் கொண்டு மூன்று விஞ்ஞான நூல்களை வெளியிட விஞ்ஞானிகள் குழு தயாராக இருக்கின்றது. ஆய்வுகள் மேற்கொண்ட விதம், உயிரினங்கள் வாழும் சூழல் மற்றும் கலங்களின் பல்வகைமை என்பன அந்நூல்களில் அடங்கியுள்ள முக்கிய விடயங்களாகும்.

**-இரஞ்சித் ஜெயகர்**



ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட 'ரொபோ' நீர்மூழ்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சூரியனிலும் 100 மடங்கு பெரிய 'பக் நெபியுலா'



அண்மையில் விண்வெளி விஞ்ஞானிகள் சிலர், எமது சூரியனைவிட 35 மடங்கு வெப்பம் நிறைந்ததும் உருவத்தில் சூரியனைவிட 100 மடங்கு பெரியதுமான நட்சத்திரமொன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த நட்சத்திரத்திற்கு 'பக் நெபியுலா' (Bug Nebula) என்று பெயரிட்டுள்ளனர். பால்வீதியில் இதுவரை கண்டறியப்பட்டுள்ள நட்சத்திரங்களில் இதுவே அதிக வெப்பமும் மிகவும் பிரகாசமானதுமாகும். ஆனாலும், பூமியில் இருந்தவாறு சாதாரண கண்களால் இதைக் காணமுடியாது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏனெனில், தூசிகள், பனிப்படலம் என்பன இதை மறைத்துக்கொண்டிருக்கின்றன. மேலும், 3 ஆயிரத்து 500 ஒளியாண்டுகள் தூரத்துக்கு அப்பால்தான் இந்த நட்சத்திரம் உள்ளது. இந்த நட்சத்திரத்தின் புறப்பகுதி வெப்பநிலை 2 லட்சம் பாகை செல்சியஸ் ஆகும். இது சூரியனைவிட 35 மடங்கு அதிகமாகும் என்று கூறப்படுகின்றது.

இவ்வளவு கடுமையான வெப்பம் காரணமாக இதன் அருகில் உள்ள கோள்களில் உயிரினங்கள் வசிக்கும் வாய்ப்பு இல்லை. அமெரிக்காவின் மென்செஸ்டர் பல்கலைக்கழக வானியற்பியல் விஞ்ஞானிகளே இதைக் கண்டுபிடித்துள்ளனர். எச்.எஸ்.டி எனப்படும் 'ஹபள்' விண்வெளித் தொலைநோக்கிதான் இதைப் படம்பிடித்துக் காட்டியுள்ளது.

இந்த விஞ்ஞானிகள் குழுவில் உள்ள மாணவர் சிசரி சைஸ்கா என்பவர் தமது கண்டுபிடிப்புப் பற்றிக் கூறும்போது, ''நாம் உண்மையிலேயே அதிர்ஷ்டமிக்க ஒரு வாய்ப்பாகவே இதனைக் கருதுகின்றோம். எனினும், இந்த வெப்பமயமான நட்சத்திரம் தற்போது அழிந்து வருகின்றது. அதாவது, குளிர்ந்து கொண்டுவருகின்றது. இதில் இருந்து வெளிப்படும் வாயுக்களை நாம் வண்ணக்கோலமான காட்சியாக பார்க்கமுடியும். உண்மையிலேயே இது ஒரு விதிவிலக்கான அதிசயம்தான்'' என்றார்.




## விண்வெளியில் வர்ணஜாலம்

விண்ணில் மின்னிக்கொண்டிருக்கும் நட்சத்திரங்கள் அனைத்தும் அனைவருக்கும் வேடிக்கையானவைதான். அவற்றில் சில நட்சத்திரங்கள் நேர்கோட்டில் அமைந்திருக்கும். சில நட்சத்திரங்கள் உங்களைப் பார்த்துக் கண் சிமிட்டும். சில ஒன்று மற்றொன்றைத் துரத்துவது போலவும் தோன்றும். இன்னும் சில சுற்றுவது போல் இருக்கும். அதனிடையே திடீரென எரிந்து விழும் நட்சத்திரங்களையும் பார்க்கலாம்.

சாதாரண கண்களுக்கு இவ்வளவு காட்சிகளை விருந்தாக்கும் நட்சத்திரங்களை தொலைநோக்கி வழியாகப் பார்த்தால் இன்னும் பிரமிப்பையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும். வெள்ளி போல விட்டுவிட்டுப் பிரகாசிக்கும் ஒவ்வொரு நட்சத்திரமும் நீலம், மஞ்சள், காவி நிறங்களில் காணப்படும். அனைத்து நிறமும் கலந்து குழப்பியது போலவும் அவை வர்ண ஜாலம் காட்டும். இப்படித் தோன்றும் அபூர்வ காட்சிகளில் ஒன்றை 'ஹபள்'





தொலைநோக்கியில் உள்ள 'கெமரா' படம்பிடித்துள்ளது.

இது ஒரு நட்சத்திரக்கூட்டமாகும். சூரியக் குடும்பத்தில் இருந்து சில மில்லியன் ஒளியாண்டுகள் தூரத்தில் இது உள்ளது. இந்த நட்சத்திரக்கூட்டத்தின் ஒளிரும் தன்மை, அதைச் சுற்றி உள்ள தூசுப் படலம் ஆகியவை அலங்கார விளக்குகள் போலவும் அவற்றில் ஏற்பட்டுள்ள குழிவான வளைவுகள் கிறிஸ்மஸ் அலங்கார பைன் மரங்களைப் போலவும் அழகாகக் காட்சி அளிக்கின்றன. இந்த நட்சத்திரக் கூட்டத்துக்கு 'ஆர் 136' என்று பெயரிடப்பட்டுள்ளது. இவற்றில் சில நட்சத்திரங்கள் அழியும் நிலையில் உள்ளன என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## நிலவின் குளிர்ச்சியான தென்மேற்குப் பகுதி

சூரியக் குடும்பத்திலேயே வெது வெதுப்பான உபகிரகம் சந்திரன் எனக் கருதப்படுகின்றது. இவ்வாறிருக்க, நிலவின் குளிர்ச்சியான பகுதி தற்போது கண்டறியப்பட்டுள்ளது. நாஸாவினால் நிலவில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்ட விண்கலம் ஒன்றே இதனைக் கண்டறிந்துள்ளது. அந்த வகையில், நிலவின் தென் மேற்குப்



பகுதிதான் மிகவும் குளிர்ச்சியாக உள்ளதாகவும், இரவில் இப்பகுதியில் மைனஸ் 294°C அளவு குளிர் நிலவுகின்றது என்றும் கூறப்படுகின்றது.

சந்திரன் 1.54° சாய்வாக இருந்தவாறே பூமியைச் சுற்றி வருகின்றது. இதனால், நிலவின் பெரும்பாலான பகுதிகளில் வெப்பமாற்றம் அதிகமாக வித்தியாசப்படுவதில்லை. நிலவின் நடுக்கோட்டுப் பகுதியில் மட்டுமே சற்று அதிகமான வெப்பமும் அதிகமான குளிரும் நிலவுகின்றது. அங்கு பகலில் 127°C வெப்பமும் இரவில் மிக அதிகமான குளிரும் நிலவுகின்றது.

சூரியன் 6 மாதகாலங்கள் பூமியின் தென் அரைக்கோளத்திலும் மிகுதி 6 மாதங்கள் வட அரைக்கோளப் பாதையிலும் சுற்றிவருகின்றது. அண்மையில் தென் அரைக்கோளத்தில் பயணித்தபோதே, வெப்ப அளவீடுகள் கணிக்கப்பட்டு-உறுதி செய்யப்பட்டுள்ளன. அதன்போது நிலவின் நடுக்கோட்டின் தென்பகுதியில் மைனஸ் 238°C வரையும் தென்மேற்குப் பகுதியில் மைனஸ் 294°C வரையும் குளிர் நிலவுகிறது என்றும் அதுவே, வடபகுதியில் அதிக அளவில் வேறுபாடுகள் இல்லை என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கிரகங்கள் நீள் வட்டப் பாதையில் சுற்றி வருவது தான் இந்த மாறுபாட்டுக்குக் காரணம் என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். அத்துடன், நிலவின் குளிர்ச்சியான தென்மேற்குப் பகுதியை விஞ்ஞானிகள் 'ஹெர்மைட்' என்று குறிப்பிடுகின்றனர்.

## 'எண்டீவர்' விற்பனைக்கு வருகின்றது

சர்வதேச ஆராய்ச்சி மையத்துக்கு அவ்வப்போது விண்வெளி வீரர்கள் அனுப்பப்பட்டு வருகின்றமை நீங்கள் அறிந்ததே. அவர்களை 'எண்டீவர்' உள்ளிட்ட விண்கலங்கள் சுமந்து செல்வது வழக்கம். இந்த விண்கலங்களில் சில தற்போது விண்வெளிப் பயணங்களில் ஈடுபடுத்தப்பட முடியாத நிலைக்கு உட்பட்டு விட்டதனால், அவை ஏல விற்பனை செய்யப்படவுள்ளமை பற்றி நாம் 'விஜய்'யில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இவ்வாறு விற்பனைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்ட விண்கலங்களில் ஒன்றுதான் 'எண்டீவர்'.

1970 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட 'எண்டீவர்' விண்கலத்துக்கு நாஸாவால் ரூ.210 கோடி விலை நிர்ணயம் செய்யப்பட்டது. உலகம் முழுவதும் உள்ள பல்வேறு அருங்காட்சியகங்கள் மற்றும் பிரபல புள்ளிகளைத் தொடர்புகொண்டு 'எண்டீவர்' விண்கலத்தை வாங்குமாறு 'நாஸா' கேட்டுக்கொண்டது. எனினும், நாஸா கூறிய விலையை யாரும் ஏற்கவில்லை. இதையடுத்து, 'எண்டீவர்' விண்கலத்தின் விலை ரூ.144 கோடியாக தற்போது குறைக்கப்பட்டுள்ளது. இதுதவிர, அதன் முக்கிய எஞ்ஜின்கள் இரண்டையும் இந்த விண்கலத்துடன் தர முன்வந்திருக்கிறது நாஸா. இதுவரை, அந்த எஞ்ஜின்களுக்கென தனியாக தலா ரூ.2 கோடி மற்றும் ரூ.4 கோடி வரை நாஸா விலை நிர்ணயம் செய்திருந்தமை குறிப்பிடத் தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது நாட்டு ஜனா

இலங்கை கடலினால் சூழப்பட்ட அழகிய நாடாகும். சுதந்திரமான இறைமை கொண்ட மக்கள் குடியரசுமாகும். நாட்டு மக்கள் அனைவருக்கும் சம உரிமையுடன் வாழக் கூடிய உரிமைகள் உண்டு. இந்த உரிமையை உறுதிப் படுத்த அரசியல் அமைப்பும் நிறைவேற்றதிகாரம் கொண்ட நாட்டு மக்களை பாதுகாக்கக்கூடிய ஆட்சியாளர்களும் உள்ளனர். இந்தக் கட்டுரையில் நாம் எமது நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை குறித்தும் ஜனாதிபதியை தெரிவு செய்யும் முறை குறித்தும் பார்ப்போம்.


தேசியகொடி


அரச இலச்சினை



## இலங்கையில் ஜனாதிபதி பதவி

இலங்கை மக்கள் குடியரசில் ஜனாதிபதி ஒருவர் உள்ளார். இவரே அரசாங்கத்தின் தலைவர். உலகின் முன் இலங்கையை அறிமுகப்படுத்தும்போது முதலில் ஜனாதிபதியையே அறிமுகப்படுத்துவர். நிறைவேற்றதிகார (ஜனாதிபதி தலைமையிலான அரச சேவை) அரசாங்கத்தின் தலைவராகவும் முப்படைகளின் தலைவராகவும் அவர் திகழ்கின்றார்.

## நாட்டிற்கு ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தியமை

1972 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் ஊடாக முதன் முறையாக ஜனாதிபதி பதவி முறை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இந்த அரசியலமைப்பின்கீழ் நிறைவேற்று அதிகாரம் தேசிய அரசுப் பேரவை (அன்று நாடாளுமன்றம் இப்பெயரிலேயே அழைக்கப்பட்டது) வசமாகக் காணப்பட்டது. அதாவது, அரச கொள்கைகளை வகுப்பது, அமுல்படுத்துவது உட்பட அனைத்து அதிகாரங்களும் தேசிய அரசுப் பேரவை வசம் இருந்தன.

இந்த அதிகாரங்கள் ஜனாதிபதியினாலும் அமைச்சர்கள் தலைமையிலான அமைச்சரவையினாலும் அமுல்படுத்தப்பட்டன. எப்பொழுதும் பிரதமரின் ஆலோசனையின் பேரில் செயற்பட்டதனாலும் மிகவும் வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் கிடைத்ததனாலும் ஜனாதிபதி பதவி பெயரளவிலானதாகவே காணப்பட்டது. இவ்வாறு பெயரளவிலான ஜனாதிபதியாக வில்லியம் கோபல்லாவ பதவி வகித்தார்.

## நிறைவேற்று அதிகாரப் பதவி

1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாகவே இலங்கைக்கு நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை அறிமுகம் செய்யப்பட்டது. இதன்படி, இலங்கையின் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக 1978.02.04 முதல் ஜே.ஆர்.ஜெயவர்தன பதவி வகித்தார்.

அதன்பின் 1978 அரசியலமைப்பு உருவாக்கப்பட்டபோது 1972 ஆம் அரசியலமைப்பின் இரண்டாவது திருத்தத்தின் ஊடாக அறிமுகம் செய்யப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை தொடர்பான ஒதுக்கீடுகள் அந்த அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டன.

## ஜனாதிபதி தெரிவு செய்யப்படுதல்

ஜனாதிபதி தேர்தலில் பொதுமக்களினால் ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படுகின்றார். தாம் விரும்பிய ஜனாதிபதி வேட்பாளரை பொதுமக்கள் தெரிவு செய்து கொள்கின்றனர். இதற்கான தேர்தலில் அனைத்து வாக்காளர்களும் (வாக்களிக்கும் தகுதி கொண்டவர்கள்) தாம் விரும்பும் வேட்பாளருக்கு (வாக்குகளைக் கோரும் நபருக்கு) வாக்களிக்க முடியும்.

## வாக்களிக்கும்போது...

வாக்காளர் வாக்களிப்பு நிலையத்திற்கு சென்ற பின் வாக்களிப்பு பத்திரங்கள் வழங்கப்படும். அதில் தாம் விரும்பும் வேட்பாளருக்கு தமது விருப்பினை (வாக்கு) புள்ளடி இடுவதன் ஊடாக தெரியப்படுத்தலாம்.

* இதில் வேட்பாளரின் தேர்தல் சின்னமும் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியும் குறிப்பிடப்பட்டிருக்கும். இங்கு வாக்காளர்கள் மூன்று விருப்பத் தெரிவுகளை இடலாம். எனினும், அதற்கு சில நிபந்தனைகள் உண்டு.
* ஒரு குறிப்பிட்ட தேர்தலில் இரு வேட்பாளர்கள் மட்டும் போட்டியிடுகின்றார்களாயின் ஒரு விருப்பத் தெரிவினையே இடமுடியும். மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்களாயின் இரண்டாவது விருப்பத் தெரிவினை வாக்காளர்கள் வெளிப்படுத்த முடியும்.
* போட்டியில் மூன்று வேட்பாளர்களுக்கு அதிகமானவர்கள் கலந்து கொள்கின்றார்களாயின் வாக்காளர்கள் இரண்டாவது மூன்றாவது விருப்பு வாக்குகளையும் வழங்கலாம்.


வில்லியம் கொபல்லாவ


ஜே.ஆர்.ஜெயவர்தன


ரணசிங்க பிரேமதாச

## ஜனாதிபதியை தெரிவு செய்தல்

* வழங்கப்பட்ட செல்லுபடியான வாக்கு எண்ணிக்கையில் 50 சதவீதத்திற்கு அதிகமான வாக்குகளைப் பெறும் வேட்பாளர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.
* வேட்பாளர் ஒருவர் செல்லுபடியான மொத்த வாக்குகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட எண்ணிக்கையை பெறாவிடின், அதிக வாக்குகள் எண்ணிக்கை மற்றும் இரண்டாவது அதிக வாக்குகள் பெற்ற வேட்பாளர்கள் தவிர மற்ற வேட்பாளர்கள் போட்டியில் இருந்து நீக்கப்படுவர். அவ்வாறு போட்டியில் இருந்து நீக்கப்பட்ட வேட்பாளர்களுக்கு வாக்களித்த ஒவ்வொரு வாக்காளர்களினதும் இரண்டாவது விருப்பு வாக்கு எஞ்சிய வேட்பாளர்களில் ஒருவருக்கு வழங்கப்பட்டிருக்குமாயின் அது அவ்வேட்பாளருக்கு அளித்த வாக்காகவே கருதப்படும்.
* மேலும், இவ்வாறு இரண்டாவது விருப்பு கணக்கில் எடுக்கப்படாவிடின் மூன்றாவது விருப்பும் அவ்வாறே கணக்கில் எடுக்கப்படும். அவ்வாறு எண்ணப்பட்ட வாக்குகள் எண்ணிக்கையில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். இரு வேட்பாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களினால் பெறப்படும் வாக்குகள் எண்ணிக்கை சமமாக இருக்குமாயின் திருவுளச் சீட்டு மூலம் வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார்.

## வாக்களிப்பும் தேர்தல் ஆணையாளரும்

ஜனாதிபதி தேர்தல், தேர்தல் ஆணையாளரினால் நடத்தப்பட வேண்டும். இதற்கான வேட்புமனு ஏற்கும் திகதி, தேர்தல் நடைபெறும் திகதி என்பனவும் தேர்தல் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

## ஜனாதிபதி வேட்பாளராக இருக்க வேண்டிய தகைமைகள்

* 30 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல்.
* ஜனாதிபதி பதவிக்கு இரு முறை போட்டியிடாதவராக இருத்தல்.
* இலங்கை பிரஜையாக இருத்தல்.


பழைய நாடாளுமன்றக் கட்டடம்


தற்போதைய நாடாளுமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திபதி தெரிவு





டி.பி.விஜேதுங்க



சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க



மகிந்த ராஜபக்ஷ

இந்த தகைமைகள் கொண்டவர்கள் இரு முறைகளில் ஜனாதிபதி வேட்பாளராக முடியும்.

✱ [illegible]லாவதாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளராகுதல்.

✱ இரண்டாவதாக நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர் அல்லது இருந்தவர் ஜனாதிபதி வேட்பாளராக முடியும்.

## வேட்பாளர்கள் கட்டுப்பணம் வைப்புச் செய்தல்

வேட்பு மனு தாக்கல் செய்யும் தினத்திலும் அதற்கு முன்தினமும் நண்பகல் பன்னிரெண்டு மணிக்கு முன்னரான காலப்பகுதியில் வேட்பாளர்களுக்காக தேர்தல் செயலகத்தில் கட்டுப்பணம் செலுத்தப்படும். அரசியல் கட்சி உறுப்பினர் 50 ஆயிரம் ரூபா கட்டுப்பணத்தை செலுத்தவேண்டும். சுயாதீன வேட்பாளர் 75 ஆயிரம் ரூபா கட்டுப்பணத்தை செலுத்தவேண்டும். எந்தவொரு வேட்பாளரும் பெற்ற வாக்குகள் எண்ணிக்கை, மொத்த வாக்குகளில் 1/8 க்கு குறைவாக இருக்கும்போது கட்டுப்பணம் அரசுடைமையாகும்.

## பதவிக்காலம்

ஜனாதிபதி தேர்தலில் பொதுமக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி ஆறாண்டுகள் பதவி வகிப்பார். அதே ஜனாதிபதி இன்னும் ஆறு ஆண்டுகள் பதவி வகிப்பதனை மக்கள் விரும்பக் கூடும்.

✱ இது பற்றி அறிய 4 ஆண்டுகளின் பின் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த முடியும்.

✱ ஒருவர் இருமுறை ஜனாதிபதி பதவி வகிக்கமுடியும். தற்போதைய ஜனாதிபதியைப் போன்று ஆறு ஆண்டுகள் பதவி நிறைவடையும் முன்னரே ஜனாதிபதி தேர்தலை நடத்தவும் முடியும்.

✱ இத்தேர்தல் பதவி வகிக்கும் ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் 'ஒரு மாதத்திற்கு குறையாத இரண்டு மாதங்களுக்கு மேற்படாத' காலப்பகுதிக்குள் நடத்தப்பட வேண்டும்.

✱ ஜனாதிபதித் தேர்தலில் பொதுத் தேர்தலில் சர்வஜன வாக்கெடுப்பில், வாக்களிக்கும்போது (எவரினதும் அச்சுறுத்தல் இன்றி) சம வேறுபாடு.

படித்த, படிக்காதவர் வேறுபாடின்றி ரகசியமானதாக அமையவேண்டும்.

## பதவியை ஏற்றுக்கொள்ளல்

ஜனாதிபதி பதவிக்கு தெரிவானவர் உயர் நீதிமன்ற நீதியரசர் முன்னிலையில் உயர் நீதிமன்ற வேறு ஒரு நீதியரசர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளலாம்.

## இடைக்கால ஜனாதிபதி

✱ ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைய முன்னர் ஜனாதிபதி பதவி வெற்றிடமானால் நாடாளுமன்றத்தினால் அதன் உறுப்பினர்களில் தகுதி வாய்ந்தவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.

✱ இவர் முன்னைய ஜனாதிபதி நிறைவு செய்ய வேண்டிய காலம் வரையே பதவியை வகிப்பார்.

✱ பதவி வெற்றிடமாகிய ஒரு மாத காலப்பகுதிக்குள் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யவேண்டும். இதற்காக நாடாளுமன்றத்தில் ரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும்.

✱ ரணசிங்க பிரேமதாசவின் படுகொலையினால் வெற்றிடமான ஜனாதிபதி பதவிக்கு இவ்வாறுதான் டபிள்யூ.விஜேதுங்க தெரிவு செய்யப்பட்டார்.

## பதில் ஜனாதிபதியை தெரிவு செய்தல்

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் வரையில் பிரதமர் பதில் ஜனாதிபதியாக பதவி வகிக்கமுடியும். அப்பொழுது பிரதமர் பதவி வெற்றிடமாகியிருப்பின் அல்லது பிரதமரால் பதில் ஜனாதிபதியாக செயற்பட முடியாவிடின் சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக முடியும்.

நோயினால் அல்லது வெளிநாட்டில் இருப்பதனால், வேறு காரணங்களினால் ஜனாதிபதி கடமைகளை ஆற்றமுடியாது என்று பதவி வகிக்கும் ஜனாதிபதி கருதினால் அக்காலப்பகுதிக்கு மட்டும் தமது அதிகாரங்களை நிறைவேற்ற பிரதமரை நியமிக்க முடியும்.

## ஜனாதிபதி பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பங்கள்

✱ ஜனாதிபதியின் இறப்பு.

✱ சபாநாயகருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் ஊடாக இராஜினாமாச் செய்தல்.

✱ ஜனாதிபதியின் பிரஜாவுரிமை இழக்கப்படல்.



சுதந்திர அரங்கில் சுதந்திரப் பிரகடனம்

✱ ஜனாதிபதி பதவிக்கு தெரிவானவர் பதவிக்காலம் ஆரம்பமாகும் தினம் தொடக்கம் 2 வாரங்களுக்குள் தமது பதவியை ஏற்காமல் நிராகரித்தல்.

## ஜனாதிபதியை நீக்குதல்

ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்குவது சற்றுக் கடினமான பணியாகும். இதற்குப் பல நடைமுறைகள் கொண்ட வழிமுறைகள் உண்டு. இதனை 'குற்றப் பிரேரணை' என்பர். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவை இக்குற்றச்சாட்டின்கீழ் பதவி நீக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியுற்றன.

ஜனாதிபதியை பதவி நீக்க உறுதியான குற்றச்சாட்டுக்கள் சிலவும் அதனை உயர்நீதிமன்றத்தில் நிரூபித்தலும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுதலும் (நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும்) அவசியமாகும்.

## குற்றப் பிரேரணைக்கான காரணங்கள்

✱ உளவியல் உடலியல் குறைபாடுகள்

✱ அரசியலமைப்பை மீறியமை

✱ ராஜ துரோகம்

✱ லஞ்சம் பெறல்

✱ ஊழல்

✱ தகாத நடத்தை

## ஜனாதிபதியின் அதிகாரங்கள்

### நீதிமன்றம் சார்ந்த அதிகாரங்கள்:

✱ பிரதம நீதியரசர் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் மேல் முறையீட்டு நீதிமன்றத் தலைவர்கள் நியமனம்.

✱ இலங்கை நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட நபருக்கு மன்னிப்பளித்தல்.

✱ தண்டனைகளைக் குறைத்தல்.

✱ தண்டனைகளை அமுல்படுத்தும் காலப்பகுதியை காலந்தாழ்த்தல்.

✱ ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யமுடியாது.

### நாடாளுமன்றம் சார்ந்த அதிகாரங்கள்:

✱ எந்த சந்தர்ப்பத்திலும் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள, உரையாற்ற, தகவல் அனுப்பமுடியும்.

✱ நாடாளுமன்ற கூட்டத் தொடர் ஆரம்பித்தல் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்தல்.

✱ நாடாளுமன்ற முதல் அமர்வில் தலைமை வகித்தல்.

✱ நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தை நியமித்தல்.

✱ நாடாளுமன்றத்தின் சபை அமர்வுகளைக் கூட்டுதல்.

✱ நாடாளுமன்ற கூட்டத் தொடரை முடித்து வைத்தல்.

✱ நாடாளுமன்றத்தைக் கலைத்தல்.

### ஆயுதப்படை அதிகாரங்கள்:

✱ முப்படைகளின் சேனாதிபதி இவரே.

✱ முப்படைகளின் தளபதிகளை நியமிப்பதும் இவரே.

✱ யுத்தம் மற்றும் சமாதானத்தைப் பிரகடனப்படுத்தும் அதிகாரம்.

### அரச சேவை அதிகாரங்கள்:

✱ சட்டமா அதிபர் கணக்காய்வு அதிபதி. பொலிஸ்மா அதிபர்.

✱ ஒம்புட்ஸ்மன் நியமனம் மற்றும் பரிந்துரை.

✱ அமைச்சர்களின் செயலாளர்கள் நியமனம்.

✱ இலங்கைக்கான தூதுவர்கள், இராஜதந்திரிகள், உயர்ஸ்தானிகர்களை நியமித்தல், பிற நாட்டு நியமனங்களை அங்கீகரித்தல்.




## இலங்கையில் ஜனாதிபதிகள்

| | |
|---|---|
| ★ வில்லியம் கொபல்லாவ (பெயரளவு) | - 1972 மே 22 - 1978 பெப்ரவரி 4. |
| ★ ஜே.ஆர்.ஜெயவர்தன (முதல் நிறைவேற்றதிகாரம்) | - 1978 பெப்ரவரி 4 - 1989 ஜனவரி 2. |
| ★ ஆர்.பிரேமதாச | - 1989 ஜனவரி 2 - 1993 மே 1. |
| ★ டி.பி.விஜேதுங்க | - 1993 மே 3 - 1994 நொவெம்பர் 12. |
| ★ சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க | - 1994 நொவெம்பர் 12 - 2005 நொவெம்பர் 19. |
| ★ மகிந்த ராஜபக்ஷ | - 2005 நொவெம்பர் 19 முதல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியத்தகு தகவல்கள்

## விசுவ கோபுரம் (The Devil's Tower)



ஐக்கிய அமெரிக்க குடியரசின் முதலாவது தேசிய ஞாபகச் சின்னமாகிய இது 380m.உயரமானது. ஏறத்தாழ 50 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வெடித்த ஒரு எரிமலை பற்றிய விபரங்களை இது கூறுகின்றது. புவியினுள் உருகிய 'கோகோல்ற்' ஆனது எரிமலைக் குழம்பாக நிலத்திலிருந்து மேல் நோக்கிச் செலுத்தப்பட்ட இடத்தின்மேல் அந்தமாக இது கருதப்படுகின்றது.

****

## சான் அன்றியாஸ் (San Andreas)



வட அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாநிலத்தின் அரீனா முனை தொடக்கம் இம்பீரியல் பள்ளத்தாக்கு வரையில் ஏறத்தாழ 1000km நீளமுடைய ஒரு வெடிப்பு புவி மீது காணப்படுகின்றது. இது புவியின் நிலத்தள எல்லையொன்றாகும்.இதன் இரு புறத்திலும் வட அமெரிக்க நிலத்தளமும் பசுபிக் நிலத்தளமும் அமைந்துள்ளன. இந்த 2 நிலத்தளங்களும் ஒரு வருடத்துக்கு இரண்டரை சென்ரிமீற்றர் வழுக்கி உராய்ந்து செல்கின்றன. இதன் எல்லையில் பாரிய பூமி நடுக்கமும் எரிமலை வெடிப்புகளும் அடிக்கடி நிகழ்கின்றன.

****

## விண்வீழ் கற்குழி (Meteor Crater)



விண்கல் வீழ்ந்தமையால் தோன்றிய ஒரு குழி அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தின் லினிஸ்கோ பிரதேசத்தில் காணப்படுகின்றது. இற்றைக்கு 50,000 வருடங்களுக்கு முன்னர் இங்கு விண்கல் வீழ்ந்திருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது. இந்த விண்கல் ஏறத்தாழ 50m விட்டமுடையது என நம்பப்படுகின்றது.

தொகுப்பு: கே.சிம்றா சனோபர்,
கமு/அல்-மனார் ம.கல்., மருதமுனை.

# வாயுள்ள பிள்ளை பிழைக்கும்



அண்டை நாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட ரோசாச் செடிகளை அரண்மனைத் தோட்டத்தில் வளர்த்து வந்தார் அரசர் இராயர். அதில் கண்ணைக் கவரும் பல வண்ணப் பூக்கள் பூத்திருந்தன. ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் அந்தத் தோட்டத்தில் தன் நேரத்தைக் கழித்தார் அரசர்.

சில நாட்களாக ரோசாப் பூக்கள் குறைவதைக் கண்ட அவர், தோட்டக்காரர்களை அழைத்து "நீங்கள் என்ன காவல் காக்கிறீர்கள்? இன்னும் ஒரு வாரத்திற்குள் அந்தத் திருடனைப் பிடிக்கவேண்டும். அப்படிப் பிடிக்காவிட்டால் நீங்கள் யாரும் உயிருடன் இருக்கமுடியாது" என்று கடுமையாக கூறினார்.

இதனால், தோட்டக்காரர்கள் அனைவரும் திருடனைப் பிடிப்பதற்காக ஒளிந்திருந்தார்கள். அப்போது சிறுவன் ஒருவன் தோட்டத்திற்குள் நுழைந்து பூக்களைப் பறித்தான். அவற்றைத் தன்மடியில் வைத்துக் கொண்டான்.

மறைந்திருந்த தோட்டக்காரர்கள் பாய்ந்து அவனைப் பிடித்து விட்டார்கள். அவன் வேறு யாருமல்ல தெனாலிராமனின் மகன் கலைவாணன்தான். அவன் பிடிபட்ட செய்தி நகரமெங்கும் பரவியது. தோட்டக்காரர்கள் அந்தச் சிறுவனை நகர வீதிகளின் வழியே ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

தெனாலிராமனின் மகன் பிடிபட்டதையும் ஊர்வலமாக அவன் அழைத்து வரப்படுவதையும் தெனாலிராமனிடம் தெரிவித்தார்கள். தெனாலிராமனின் மனைவி அழுது புலம்பத் தொடங்கினாள். ஊர்வலம் அவர்கள் இருந்த வீதி வழியாக வந்தது. மடியில் பூக்களோடு இழுத்துச் செல்லப்படும் தன் மகனைப் பார்த்தான் தெனாலிராமன்.



அழுதுகொண்டிருந்த மனைவியிடம், "உன் மகன் வாயுள்ள பிள்ளையானால் பிழைத்துக்கொள்வான். இல்லையேல் தண்டனை அனுபவிப்பான். நம்மால் என்ன செய்யமுடியும்?" என்று உரத்த குரலில் சொன்னான்.

இதைக்கேட்ட கலைவாணன், 'தனது தந்தையார் ஏன் அப்படிச் சொன்னார்? அதற்கு ஏதோ பொருள் இருக்கவேண்டும்' என்று சிந்தித்தபடி நடந்தான்.

தந்தை சொன்ன பொருள் அவன் அறிவிற்குப் புலப்பட்டது. மடியிலிருந்த ரோசாப் பூக்களை ஒவ்வொன்றாக யாருக்கும் தெரியாமல் சாப்பிட்டுக்கொண்டே வந்தான்.

அரசவைக்குள் அவன் நுழைவதற்கும் ரோசாப் பூக்கள் அனைத்தும் தீர்வதற்கும் சரியாக இருந்தது. அரசரை வணங்கிய தோட்டக்காரர்கள், "அரசே பூக்களை திருடிய திருடன் இவன்தான். இவனை கையும் களவுமாகப் பிடித்து இங்கு இழுத்து வந்திருக்கிறோம்" என்றார்கள்.

"இந்தச் சிறுவனா திருடன்?" என்று கோபத்துடன் கேட்டார் அரசர்.

அப்போது அச்சிறுவன், "அரசே! திருடனைப் பிடிக்க இயலாத இவர்கள் அந்த வழியாகச் சென்ற என்னை இழுத்து வந்துவிட்டார்கள். நான் எவ்வளவோ சொல்லியும் இவர்கள் கேட்கவில்லை. நான் திருடியிருந்தால் பூக்கள் என்னிடம் இருக்கவேண்டுமே. எங்கே பூக்கள் பாருங்கள்" என்று தன் சட்டையை உதறிக் காட்டினான்.

பூக்கள் எதுவும் அவனிடம் இல்லை என்பதை அறிந்த தோட்டக்காரர்கள் திகைத்தார்கள். பூக்கள் எப்படி மாயமாக மறைந்திருக்கும் என்பது அவர்களுக்குப் புரியவில்லை.

"அரசே! இவன்தான் திருடினான்" என்று நடுங்கியபடியே முணுமுணுத்தார்கள் அவர்கள். "திருடனைப் பிடித்தால் சாட்சியோடு இங்கே அழைத்து வாருங்கள். இல்லாவிட்டால் உங்களுக்குக் கடுந்தண்டனை கிடைக்கும். எல்லோரும் போய்த் தொலையுங்கள்" என்று கோபத்துடன் கத்தினார் அரசர்.

சிறுவனை விடுவித்த அவர்கள் தங்கள் தலை தப்பியதுபோதும் என்று அங்கிருந்து சென்றார்கள்.

எம்.ஏ.பாத்திமா ஹப்ஷா,
க/அக்குறனை மு.பா.ம.வித்.,

# செய்யாதே



அழுக்கில் கிடந்து புரளாதே
அச்சம் கொண்டு மிரளாதே

நகத்தைப் பல்லால் கடிக்காதே
நாளும் சோம்பல் முறிக்காதே

துரும்பை எடுத்துக் கடிக்காதே
சும்மா செடியை ஒடிக்காதே

கண்ட இடத்தில் துப்பாதே
கருத்தாய் இருக்கத் தவறாதே

பிறரை என்றும் திட்டாதே
பெரியோர் முன்னால் கத்தாதே

பாதையை அசுத்தம் செய்யாதே
படித்தவற்றை மறக்காதே!

டி.டி.பயாஸ், தரம் - 9D,
கிரி/கெகுணகொல்ல தே..பாட..,

# ஆயிரம் ஆண்டு மரங்கள்

ஒரே இடத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு நம்மால் நின்றுகொண்டிருக்க முடியுமா? அப்படி அமைதியாக நின்று பல்வேறு மனித நாகரிகங்களைக்கண்டு கொண்டிருப்பவை மரங்களே.



மனிதர்களின் கட்டை வண்டிக்காலம் முதல் 'ஜெட்' விமானக் காலம் வரை அவை கண்டு வந்திருக்கின்றன.அத்தகைய எண்ணற்ற மரங்கள் உலகெங்கும் உள்ளன. அந்த மரங்களால் மட்டும் பேச முடிந்தால் அவற்றால் எத்தனை கதைகளைக் கூற முடியும் என்று கற்பனை செய்து பாருங்கள்.

மரங்களால் பேசமுடியாது என்ற போதும், பல்வேறு வழிகளில் தகவல்களைத் தெரிவிக்க முடியும். குறிப்பாக, மரங்களின் பிரதான பகுதியில் உள்ள வளையங்களை ஆராய்வதன் மூலம் அவற்றின் வயதைக் கூறிவிட முடியும். அப்படித்தான் உலகின் மிக வயதான மரங்களைக் கண்டுபிடித்தார்கள்.

அமெரிக்காவின் 'நெவாடா' குன்றுப் பகுதியில் காணப்பட்ட மிக வயதான மரத்தின் பெயர் 'புரோமியஸ்'. 1964 ஆம் ஆண்டு டொனால்டு கரே என்ற ஆராய்ச்சியாளர் இப்பகுதியில் உள்ள மரங்களை ஆராய்ந்துகொண்டிருந்தார். அப்போது, மரங்களைத் துளைத்துப் பார்க்கும் அவரது கருவி ஒரு மரத்தில் சிக்கிக்கொண்டுவிட, அதை மீட்பதற்காக அம்மரம் வெட்டிச் சாய்க்கப்பட்டது. ஆனால், அந்த மரத்தின் வளையங்களை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்தபோதுதான், அம்மரத்தை வெட்டியது எவ்வளவு பெரிய தவறு என்பது புரிந்தது. காரணம், அந்த மரம் 5 ஆயிரம் ஆண்டு வயதானது.

அந்தவகை மரங்கள் வறட்சியான மேற்கு அமெரிக்கப் பகுதியில் காணப்படுகின்றன. மிக மெதுவாக வளரும் இம்மரங்களின் சராசரி வயது ஆயிரம் ஆண்டுகள் ஆகும். தற்போது பூமியில் உள்ள மிக அதிக வயதான மரத்துக்கு 'மெதுசேலா' (பைபிளில் அதிக ஆண்டுகள் வாழும் கதாபாத்திரத்தின் பெயர்) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது கி.பி 2832 ஆம் ஆண்டளவில் தோன்றியதாகும். இது அமெரிக்காவின் கலிபோர்னியா பகுதியில் காணப்படுகிறது. ஆனால், மிகச் சரியாக இந்த மரம் எங்கே இருக்கிறது என்று தெரிவிக்காமல் ரகசியமாக வைத்திருக்கிறது அமெரிக்க அரசு. இந்த மரத்துக்கு எவராவது பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்ற அச்சம்தான் காரணம்.

# சிரிப்பே சிறந்த மருந்து



சிரித்து மகிழ்பவர்களின் முகங்கள் எப்போதும் அழகுடன் இருக்கும். கண்களில் கனிவு தெரியும். இவை முக அழகுக்காகப் பூசும் பூச்சுக்களைவிட ஆயிரம்மடங்கு மேலானவை. தீய எண்ணங்களை விலக்கி, நல்ல சிந்தனைகளைத் தூண்ட நகைச்சுவை உதவுகின்றது. மற்றவர்களுடன் கலகலப்பாகப்பேசவும் கருத்துக்களை இலகுவில் பரிமாறிக்கொள்ளவும் நகைச்சுவை உணர்வு உதவுகின்றது. நகைச்சுவையாகப் பேசுபவர்கள் இலகுவில் மற்றவர்களைக் கவர்ந்து விடுவார்கள்.

கற்பித்தலின்போது மாணவர்களுக்கிடையே சிரிப்பதற்கான சூழலை சில ஆசிரியர்கள் உருவாக்கிக் கொடுப்பது இதனால்தான். இது வகுப்பறையில் மகிழ்ச்சியான கற்றல், கற்பித்தலை மேம்பாடு அடையச் செய்ய உதவுகிறது. குடும்பங்களில் பெற்றோர், பிள்ளைகளுக்கிடையே சிரிப்பு அதிகம் நிகழவேண்டும். வேடிக்கைக் கதைகள், நகைச்சுவைத் துணுக்குகள் என்பவை அடிக்கடி சொல்லப்படுமானால் வீட்டில் எப்பொழுதும் மன மகிழ்ச்சி நிலவும். இது உற்சாகமாக இருப்பதற்கும் சுறுசுறுப்பாக இயங்கவும் தூண்டுதலாக அமைவதோடு, குடும்பத்தில் கருத்தொற்றுமையும் ஏற்படும்.

மு.பிரியங்கா, மன்/அ.மு.க.பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வினாத்தாள் I (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: .................................... நேரம்: 45 நிமிடங்கள்


★ *25 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் பந்தியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதுடன் தொடர்புபட்டவை. ஒவ்வொரு வெற்றிடத்துக்கும் மிகப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.*

லவனுக்கு தொலைக்காட்சி பார்க்க ஆசை. ஆனால் 25. ............................ [(1) அவர்களது (2) அவரது (3) அவனது] பெற்றோர் தொலைக்காட்சியைப் பார்க்க அனுமதிப்பதில்லை. அதனால், லவன் 26. ............................... [(1) வெட்கப்பட்டான் (2) வேதனைப்பட்டான் (3) படிக்கவில்லை] அவனது நண்பர்கள் தொலைக்ககாட்சியில் பார்த்த கார்ட்டூன் 27. ........................... [(1) சம்பவத்தைப் (2) பாடலைப் (3) நிகழ்ச்சிகளைப்] பற்றி மற்றைய நண்பர்களுடன் உரையாடும்போது லவனால் 28. ..................... [(1) தாங்க முடியவில்லை (2) நினைக்க முடியவில்லை (3) கேட்க முடியவில்லை] அவனின் கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் வெளிவரத் தொடங்கின.


29. **இன்று வெள்ளிக்கிழமை. நாளை மறுநாள் 20 ஆம் திகதி. சென்ற வெள்ளிக்கிழமை எத்தனையாம் திகதி?**
    (1) 2 ஆம் திகதி (2) 11 ஆம் திகதி (3) 18 ஆம் திகதி


30. **ஒரு மணித்தியாலத்தில் 10 தொப்பிகள் தைக்கும் தொழிலாளி, 90 நிமிடங்களில் எத்தனை தொப்பிகள் தைப்பான்?**
    (1) 25 (2) 20 (3) 15

31. **பாடசாலை விளையாட்டு மைதானத்தில் 35 இலிருந்து 45 வரையிலான எண்கள் பொறிக்கப்பட்ட மேலங்கியுடன் விளையாட்டு வீரர்கள் நின்றனர். மைதானத்தில் நின்ற விளையாட்டு வீரர்கள் எத்தனை பேர்?**
    (1) 11 (2) 10 (3) 12

32.  **அன்னாசிப்பழம், உணவு, பழங்கள் ஆகிய மூன்றுக்கும் இடையிலான தொடர்பைக் காட்ட இவ்வுரு வரையப்பட்டுள்ளது. இதில்**  **இனால் காட்டப்படுவது எது?**
    (1) உணவு (2) அன்னாசிப்பழம் (3) பழங்கள்

33. **சம்பூர் மகா வித்தியாலயம் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில், கிண்ணியா-மூதூர் கல்வி வலயத்தில் அமைந்துள்ளது. இவை கீழே உள்ளவாறு குறியீடுகளால் காட்டப்படுகின்றன.**




34. **குமார் படம் ஒன்றினைப் பார்த்து பின்வருமாறு கூறினான், "இந்தப் படத்தில் இருப்பவரின் தந்தை எனது அம்மாவின் தந்தை ஆவார்". அப்படியானால் படத்தில் காணப்படுபவர் குமாரின்;**
    (1) மாமி (2) பாட்டன் (3) மாமா

35. லிங்கனின் ஒரே பிள்ளையாகிய பாபு, பாடசாலைக்குத் தாமதமாக வந்து தம்பியுடன் கடைக்குச் சென்று திரும்பி வருவதற்குத் தாமதம் ஏற்பட்டதெனக் கூறினான். இது உண்மையாக இருக்கலாம். இதற்கு காரணம்;
    (1) பாபு உலாவித்திரிய விரும்புகின்றமை
    (2) பாபுவிற்குச் சில சகோதரர்களும் சகோதரிகளும் இருக்கின்றமை
    (3) பாபுவின் சிறிய தகப்பனாரின் ஒரு மகனும் பாபுவின் வீட்டில் இருக்கின்றமை

★ *36 ஆம், 37 ஆம் வினாக்களுக்கு உரிய விடைகளை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*

36. அடைப்பினுள் தரப்பட்டுள்ள எழுத்துக்களுள் மூன்று எழுத்துக்களைப் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தி, புரதச்சத்து அடங்கியுள்ள உணவுப் பொருளைக் குறிக்கும் பெயரை புள்ளிக்கோட்டில் எழுதுக.

| க, வ, று, லை, ப, ற, ய, கு |
|---|


.......................................................

37. அடைப்பினுள் தரப்பட்டுள்ள எழுத்துக்களுள் நான்கு எழுத்துக்களைப் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தி, பிராணி ஒன்றின் பெயரை புள்ளிக்கோட்டில் எழுதுக.

| தி, ல, ந், கு, ர, சி, ஆ, க, மை |
|---|

.......................................................

★ ***இவ்வரைபடத்தில் ஒரு குறிப்பிட்ட பாடசாலையின் நூலகத்தில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை காட்டப்படுகின்றது. இதற்கேற்ப, 38-40 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.***




கணிதப் புத்தகங்களின் எண்ணிக்கை 100 எனில்;

38. **சுற்றாடல் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?**
.......................................................

39. **தமிழ் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?**
.......................................................

40. **நூலகத்தில் உள்ள மொத்தப் புத்தகங்கள் எத்தனை?**
.......................................................

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

## வினாத்தாள் II

பெயர் : .................................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01. **பின்வரும் அழைப்பிதழை வாசித்து, அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடைகள் தருக.**

**அழைப்பிதழ்**
*சம்பூர் மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின்*
*கல்விக் கண்காட்சி - 2010*

*இடம்: வித்தியாலய மண்டபம்*
*காலம்: ஏப்ரல் 18, 19 மற்றும் 20 ஆம் திகதி*
*காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை*
*பிரதம அதிதி*
*பேராசிரியர் ச.எழிலரசன்*
*இக்கண்காட்சியைப் பார்வையிட வருமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.*
*சம்பூர் - 5*
*திருகோணமலை* *அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்*

(i) கண்காட்சியை நடாத்தும் பாடசாலையின் பெயர் என்ன? ..............................
(ii) எந்தப் பிரிவு மாணவர்களின் கண்காட்சி நடைபெறுகிறது? ..............................
(iii) பிரதம அதிதியின் பெயர் என்ன? ..............................
(iv) கண்காட்சி எத்தனை நாட்கள் நடைபெறும்? ..............................
(v) கண்காட்சி எத்தனை மணிக்கு ஆரம்பமாகின்றது? ..............................
(vi) கண்காட்சி எத்தனை மணிக்கு நிறைவடைகின்றது? ..............................
(vii) இப்பாடசாலை எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது? ..............................

02. அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து, வெற்றிடத்தை நிரப்புக.
    (i) காடுகளை ....... ப்பதனால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகிறது. (அலி,அளி,அழி)
    (ii) அவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு மாடியிலிருந்து .............................. (இரங்கிணர், இறங்கினர், இரங்கினர்)

03. (i) **பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக.**
    ❖ குழந்தைகள் நிலாக்காட்சியைக் கண்டு களித்தனர்.
    .......................................................
    (ii) **பின்வரும் வாக்கியத்தைப் பன்மையாக மாற்றி எழுதுக.**
    ❖ சூரியனைக் கண்டு தாமரை மலர் மலர்ந்தது.
    .......................................................

04. **பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.**
    (i) முகம் மலர்தல் - ..............................
    (ii) கண் வளர்தல் - ..............................

05. **பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.**
    (i) விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது - ..............................
    (ii) தாய், தந்தையை இழந்தவன் - ..............................

06. **பொருத்தமான நிறுத்தல் குறிகளை இடுக.**
    (i) தம்பி பிரதேச செயலகத்திற்கு எப்படிச் செல்ல வேண்டும்
    (ii) தாயே சுக்கிரீவன் எங்கே இருக்கிறான் என்று இராமன் கேட்டான்

07. **சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.**
    (i) ஊக்கத்தைக்/மகிழ்ச்சி/உங்கள்/கண்டு/நானும்/அடைகிறேன்
    .......................................................
    (ii) தொழிற்சாலை/கடதாசித்/இருக்கிறது/வாழைச்சேனையில்
    .......................................................

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஹஜாஸ் மலைத்தொடரில் அமைந்துள்ள கிராமம்

தேசிய இலச்சினை

# யெமன்

**அரசு:** நாடாளுமன்றக் குடியரசு.

**அமைப்பு:** வட யெமன், 1918 நொவெம்பர் முதலாம் திகதி ஒட்டோமன் பேரரசில் இருந்து சுதந்திரமடைந்தது. தென் யெமன், 1967 நொவெம்பர் 30 ஐக்கிய ராச்சியத்திடமிருந்து சுதந்திர மடைந்தது. 1990 மே 22 ஆம் திகதி இரு யெமன்களும் ஒன்றிணைந்தன.

**ஜனாதிபதி** (1990): அலி அப்துல்லா சாலி.

**பிரதமர்** (2007): அலி முஹம்மத் அல் முஜாவர்.


சனா நகரின் தோற்றம்


தேசிய நூதனசாலை - சனா

## தரைத்தோற்றம்

700 மைல் (1130 கி.மீ) நீளமான-ஒடுங்கிய கரையோரச் சமவெளி தெற்கில் காணப்படுகின்றது. இது மலைகள், பீடபூமிகளால் நிறைந்து காணப்படுவது மற்றொரு சிறப்பு அம்சமாகும். மத்திய கிழக்கில் மிகவும் வளமான மண்ணைக்கொண்ட ஒரு நாடாகும். ஆனால், அதன் பெரும்பகுதி அபிவிருத்தியடையாமலும் அங்கு மறைந்திருக்கும் வளங்கள் பயன்படுத்தப்படாமலும் இருக்கின்றன. செங்கடல் ஓரமாகவுள்ள பகுதி முழுவதும் மட்டமான மணற்பாங்கான சமவெளிப் பிரதேசமாகும்.

**அமைவிடம்:** செங்கடலில் அரேபிய தீபகற்பத்தின் தென் மேற்கு முனையில், எதியோப்பியாவிற்கு நேரெதிரில் அமைந்துள்ளது. **வடக்கு**-சவூதி அரேபியா; **கிழக்கு**-ஓமான் என்பன எல்லைகளாக அமைந்துள்ளன.

**மொத்த நிலப்பரப்பு:** 203,849 ச.மைல் (527,969 ச.கி.மீற்றர்).

**உயர் சிகரம்:** ஜபல் அன் நபி ஷுவைப், உயரம்-12336 அடி;

**தாழ் மையம்:** அரேபியன் கடல்.

**நிலப் பிரிவுகள்:** 19 ஆள்புலங்கள்.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** சனா.

**ஏனைய பெரிய நகரங்கள்:** ஏடன், ஹொடைடா, டியாஸ்.

**மக்கள் தொகை:** 23,822,783.

**நாணயம்:** ரியால்.

**மொழி:** அரபு.

**இனங்கள்:** பெரும்பான்மையோர் அரேபியர். தவிர; தெற்காசியர், ஐரோப்பியர்.


விளைநிலங்கள்

**சமயங்கள்:** இஸ்லாம் (சுன்னி மற்றும் ஷியா), சிறியளவில் யூதம், கிறிஸ்தவம் மற்றும் இந்து.

**எழுத்தறிவு** (2003): 50%.

**இணையத்தளக் குறியீடு:** .ye

**சர்வதேச தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** 967.

**தேசிய சின்னங்கள்:** மரம், மலர், பறவை, மிருகம், விளையாட்டு எதுவுமே பிரகடனப்படுத்தப்படவில்லை.

## தேசிய கீதம்

Raddidi Ayyatuha 'D-dunya Nashidi
Raddidihi Wa-a 'idi Wa-a idi
Wa 'Dhkuri Fi Farhati Kulla Shahidi
Wa'Mnahihi Hullalan Min Daw'i Idi…என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

வரலாற்று ரீதியில் யெமன் நாட்டின் ஆரம்ப காலம் 'மினாயியன்' அரசின்கீழ் கி.மு 1200 முதல் 650 வரை இருந்துள்ளது. 'சபாயியன்' அரசின்கீழ் கி.மு 750 முதல் 115 வரை இருந்துள்ளது. கி.பி 628 ஆம் ஆண்டு இந்நாட்டு மக்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவிய பின், 10 ஆம் நூற்றாண்டில் 'ரஸீட்' அரச வம்சத்தினரின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. இந்த அரச வம்சத்தின் தாக்கம் வட யெமனை பொறுத்த வரையில் அதன் அரசியலில் 1962 வரை ஆதிக்கம் செலுத்தியது.

ஒட்டோமன் துருக்கியின் ஆதிக்கத்தில் இருந்து 1918 இல் சுதந்திரமடைந்தது. நாட்டின் தென்பகுதி 1967 வரை பிரிட்டனின் பாதுகாப்பில் இருந்தது. பின்பு மார்க்ஸிஸ்ட் ஆட்சியில் தென் யெமன், ஜனநாயகக் குடியரசானது. 1979 இல் சோவியத் யூனியனின் உறுதியான தலையீட்டினால் அரேபிய உலகில் ஒரு மார்க்ஸிய அரசாக உருவெடுத்தது. 1990 இல் இரு யெமன்களும் ஒன்றிணைந்தன.


ஜனாதிபதி


பிரதமர்


சொகட்ரா தீவு

## காலநிலை

கிழக்கே அமைந்துள்ள பாலைவனப் பகுதிகளிலும் செங்கடல் கரையோரப் பகுதிகளிலும் முகில்கள் அற்ற வெப்பமும் உலர் கால நிலையும் வருடம் முழுவதும் நிலவுகின்றன. நாட்டின் உட்பகுதியில் [illegible] பகுதிகளிலும் வெப்பம் காலத்திற்குக் காலம் மாறுபடும். ஏப்ரல் முதல் மே வரையிலும் ஜூலை முதல் செப்டெம்பர் நடுப்பகுதி வரையிலுமாக இரு மழைக்காலங்கள் நிலவுகின்றன. இக்காலகட்டங்களில் இந்து சமுத்திரத்தில் பருவக் காற்றுகள் வீசுவதால், அவை மேற்கு மலைச்சரிவுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் அதிக மழைவீழ்ச்சியைத் தருகின்றன.

## கலாசாரம்

புவியியல் ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் மிகவும் பழமையானதும் உறுதியானதுமான கலாசாரத்தைக் கொண்டுள்ளது. அயல் நாடுகளின் தாக்கத்தினால் மிகவும் மாறுபட்ட கலாசாரம் இங்கு நிலவுவதோடு, கலாசார செல்வம் மிகு நாடு என்றால் அது மிகையாகாது. இந்நாட்டின் கலாசாரத்தில் பல புராதன நாகரிகங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கைக்கேற்ற நிலம் 3%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தானியங்கள், பழ வகைகள், மரக்கறி வகைகள், கோப்பி, பருத்தி, பாற்பண்ணை உற்பத்திகள், கால்நடைகள், கோழிப்பண்ணைகள், மீன்.

**தொழிலாளர் தொகை:** 6.316 மில்லியன் (பெரும்பாலான மக்கள் விவசாயத் துறையிலேயே ஈடுபட்டுள்ளனர்).

**வேலையற்றோர்** (2003): 35%.

**கைத்தொழில்கள்:** மசகு எண்ணெய் உற்பத்தியும் பெற்றோலிய சுத்திகரிப்பும், பருத்திப் புடவைகள், தோல் பொருட்கள், உணவுப் பொருட்கள். **இயற்கை வளம்:** பெற்றோலியம், மீன், உப்பு, பளிங்கு, தங்கம், நிலக்கரி, நிக்கல், செம்பு. **ஏற்றுமதிகள்** (2006): மசகு எண்ணெய், கோப்பி, கருவாடு. **இறக்குமதிகள்:** உணவும் உயிருள்ள மிருகங்களும், இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும், ரசாயனப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** தாய்லாந்து, சீனா, சிங்கப்பூர், ஐக்கிய அரபுக் குடியரசுகள், ஐக்கிய அமெரிக்கா, சவூதி அரேபியா, பிரான்ஸ், இந்தியா, குவைட்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்: பிரதான தொலைபேசிப் பாவனையாளர்** (2006) -968,400; **செல்லிடத்தொலைபேசி**-2.075 மில்லியன். **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்:** Am 6, FM 1, SW 2. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்:** 7. **இணையத்தள வழங்குனர்** (2006): 171. **இணையத்தளப் பாவனையாளர்கள்** (2005): 220,000.

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்:** மொத்தம் 71300 கி.மீ (செப்பனிடப்பட்டவை 6200 கி.மீ; செப்பனிடப்படாதவை 65100 கி.மீ).


**துறையும் துறைமுகமும்;** ஏடன், அல் ஹுடைடா அல் முகாலா, அஸ் சாலிஃப், ராஸ் இஸ்ஸா, மொகா, நிஷ்டன்.

**விமான நிலையங்கள்** (2002): 44.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

*** சாதா கலைக்குன்று * சொகட்ரா தீவு * வாடி தார் * ஷிபாம் * ஷிஹாரா மர்ம பாலம் * சனா பழைய நகரம் * ஏடன் நகரம் * கவ்பகான் நகர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடலில் வாழும் ஆமை உறவினர்

**புவியின் பெரும்பாலான பகுதியை சமுத்திரங்களே மூடி இருக்கின்றன. சமுத்திரங்களில் லட்சக்கணக்கான உயிரினங்கள் வாழ்கின்றன. இந்த உயிரினங்களில் சுமார் பத்து லட்சம் வருடத்திற்கும் மேற்பட்ட புராதன கால உரிமை கொள்ளும் ஓர் உயிரினம்தான் கடல் ஆமை.**

**கடல் வாழ் உயிரினங்களில் மிகப் பழைய உறுப்பினராக இந்த கடல் ஆமைகள் திகழ்ந்தபோதும், இன்று அழிந்துபோகும் அச்சுறுத்தலுக்கு இந்த ஆமையினம் முகம் கொடுத்து வருகின்றது. எனவே, ஆமை இனத்தின் ஓர் உறுப்பினரான கடல் ஆமைகள் பற்றி அறிந்துகொள்வோம்.**


## கடல் ஆமையின் குடும்பம்

கடல் ஆமையானது 'ரெப்டீலியா' (Reptelia) வகையைச் சேர்ந்த ஓர் உயிரினமாகும். விலங்கியல் விஞ்ஞானத்தின்படி 'ரெப்டீலியா' என்பது ஊர்ந்து செல்லும் உயிரினமாகும். கடல் ஆமைகள், உடும்புகள், முதலைகள், பாம்புகள், ஓணான்கள் உள்ளிட்ட அனைத்து ஊர்வனவும் 'ரெப்டீலியா' வகைக்கு உரித்தானவையாகும். ஊர்வன குடும்பத்தைச் சேர்ந்த கடல் ஆமையானது சூழல் வெப்பநிலைக் குருதியுடைய ஓர் உயிரினமாகும். இத்தகைய உயிரினங்களின் உடல் வெப்பநிலையானது சூழலில் நிலவும் வெப்பத்தைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது.

## உலகின் முதலாவது கடல் ஆமை

கடல் ஆமைக்கு மிக நீண்ட வரலாறு இருக்கின்றது. அதன்படி, சுமார் 10,65,000-1,1400,000 வருடங்களுக்கு முன்னரான 'மெசசொய்க்' யுகத்திற்கு உரித்தான ஓர் உயிரினமாகவே கடல் ஆமை கருதப்படுகின்றது. 'டைனோசர்' யுகத்தில் இருந்து அண்மைக்காலம் வரையில் பாரிய சமூகமாக இவை வாழ்ந்து வருகின்றமைக்கான சான்றுகளும் கிடைத்துள்ளன.

## ஆர்(ச்)செலோன்



ஆர்(ச்) செலோன் என்பது தற்கால கடல் ஆமையின் முதலாவது உறுப்பினரான ராட்சத கடல் ஆமையாகும். இது நிகழ்கால ஆமைகளின் பூர்வீகமாகக் கருதப்படுகின்றது. இதன் 10 அடி (3.5 மீற்றர்) நீளமான எச்சமொன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. எனினும், அந்த எச்சத்தின் பின்பக்கக் கால்களில் ஒரு காலினை இதுவரை கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.

## கடல் ஆமையின் திறமை

பெரும்பாலான கடல் ஆமைகள் மிகவும் திறமையாக நீந்தக்கூடியன. அவ்வாறே,இன்றும் சில கடல் ஆமைகள் சிறந்த முறையில் தூர இடங்களை நோக்கிச் சஞ்சரிக்கக்கூடியன. மிக நீண்ட தூரம் நீந்திச் செல்லக்கூடிய இந்த இயல்பானது கடல் ஆமைகளிடம் நாம் காணும் விசேட லட்சணமாகும். இதற்கேற்ற உடல் அமைப்பை கடல் ஆமைகள் கொண்டுள்ளன.

கடல் ஆமைகள் பொதுவாக சமுத்திர நீரிலேயே வாழ்கின்றன. முட்டையிடுவதற்கு மாத்திரமே அவை தரைப்பகுதிக்கு வருகின்றன. அதன்படி, ஆழ்கடலில் வாழும் பெண் கடல் ஆமைகள் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள ஒரு கடற்கரையை நோக்கி முட்டை இடுவதற்காக வருகின்றன. அவை பெரும் கூட்டமாக அல்லது சிறிய குழுக்களாக வந்து இவ்வாறு முட்டை இடுகின்றன.

அத்துடன், இவை பெரும்பாலும் ஒரே பிரதேசத்திலேயே முட்டைகளை இடுகின்றன. அதாவது, ஒருமுறை முட்டையிட்ட கடற்கரையையே அடுத்த முறையும் முட்டையிடுவதற்காக தெரிவு செய்கின்றன. இந்த இடங்களை எங்கிருந்தாலும் சரியாகக் கண்டறிய இவை தவறுவதில்லை. ஆமைகள் இவ்வாறு ஒரே பயணப்பாதையில் மீண்டும் மீண்டும் எவ்வாறு பயணிக்கின்றன? என்பது குறித்து விஞ்ஞானிகளாலும் இதுவரை சரியான விளக்கம் தரமுடியவில்லை.


## உணவு உட்கொள்ளும் முறை

கடல் ஆமைகளுக்கு பற்கள் இல்லை. மாறாக, அவற்றுக்கு பறவைகளின் அலகு போன்று கூர்மையான ஒரு சோடி தாடை எலும்புகள் மட்டுமே அமைந்துள்ளன. அவற்றின் உதவியோடுதான் கடல் ஆமைகள் தமது உணவை கிழித்தும் தூளாக்கியும் அரைத்தும் விழுங்குகின்றன.

## ஆயுட்காலம்

இவற்றின் ஆயுட்காலம் இத்தனை ஆண்டுகள்தான் என உறுதியாகச் சொல்ல முடியாவிட்டாலும், கடல் ஆமையொன்று சுமார் 80 முதல் 100 வருடங்கள் வரையான ஆயுட்காலத்தைக் கொண்டிருக்கும் என கடல் வாழ் உயிரின விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.


## கடல் ஆமையின் எலும்புத் தொகுதி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11 ஆம் பக்க தொடர்ச்சி)




## ஆண், பெண் வேறு பிரித்தறிதல்



சிறுபராய கடல் ஆமையொன்றை ஆணா, பெண்ணா எனப் பிரித்தறிந்துகொள்வது மிகச் சிரமமானதாகும். வளர்ச்சி அடைந்த ஆண் கடல் ஆமையொன்றின் முன்னங்கால்களில் நீளமான நகங்களும் ஓரளவு நீளமான வால் ஒன்றும் காணப்படுகின்றது.

இத்தகைய வேறுபட்ட அம்சங்களைக்கொண்டு மாத்திரமே கடல் ஆமைகளை ஆண், பெண் என பிரித்தறிந்துகொள்ளலாம்.

## முட்டையிடும் இடத்தை தேர்ந்தெடுக்கும் முறை

பெண் கடல் ஆமை மிகவும் பாதுகாப்பான முறையில்தான் முட்டையிடும். முட்டை இடுவதற்கென பாதுகாப்பான இடமொன்றைத் தெரிவு செய்துகொள்ளும். பெரும்பாலும் பெண் கடல் ஆமையொன்று தான் பிறந்த கடற்



கரையையே முட்டை இடுவதற்கு ஏற்ற இடமாகத் தெரிவு செய்துகொள்ளும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். முட்டையிடுவதற்கு சிறந்தது எனத் தெரிவு செய்யும் கடற்கரையை அண்மித்த கடலில் குறித்த கடல் ஆமை இரவாகும் வரை காத்திருக்கும். இரவானதும் கடற்கரைக்குச் சென்று, தெரிவு செய்த இடத்தில் தனது உடல் நிலத்தில் பதிவதற்கு ஏற்றவாறு முன்னங்கால்களால் குழி ஒன்றைத் தோண்டித் தயார் செய்துகொள்ளும். பின்னர் அந்தக் குழிக்குள் தனது பின்னங்கால்களால் கோப்பை வடிவில் 'முட்டைக் கூடு' என அழைக்கப்படும் குழியொன்றையும் தோண்டும்.

## முட்டையும் முட்டைக் கூடும்

கடல் ஆமையொன்று முட்டையிடுவதற்கென தோண்டும் குழி 'முட்டைக் கூடு' என அழைக்கப்படுகின்றது. இந்த முட்டைக் கூட்டின் அளவானது அதில் இடப்படும் முட்டைகளின் எண்ணிக்கை மற்றும் கடல் ஆமையின் வகையைப் பொறுத்து ஒன்றுக்கொன்று வேடுபடும். சாதாரணமாக இத்தகைய குழியொன்று 50 முதல் 70 சென்ரிமீற்றர் அளவு ஆழத்தில் இருக்கும். இத்தகைய அளவுடைய குழி ஒன்றில் சுமார் 120 முட்டைகளை இடும். பெரும்பாலான கடல் ஆமை வகைகளின் முட்டையொன்றின் அளவும் தோற்றமும் மேசைப் பந்தொன்றைப் போல் இருக்கும். இந்த முட்டையின் கோது மிகவும் மென்மையானது.அதனால், இந்த முட்டையொன்று தரையில் விழுந்தால், ஏனைய உயிரினங்களின் முட்டைகளைவிட உடைந்து வீணாகும் வாய்ப்புகள் அதிகமாகும்.

## முட்டையிட்ட பின்



முட்டைகளை மணல் போட்டு மூடிய பின்னர் அது
சென்றுவிடும். ஏனைய ஊர்வனபோன்று கடல் ஆ
காப்பது இல்லை. இந்த முட்டைகள் இயற்கையாக
இரண்டு மாதங்களில் அதாவது, 60 நாட்களில் சூரி
சூடாகும்பொழுது முட்டைகள் பொரித்து குஞ்சுகள்

## குஞ்சுகளின் பிற

60 நாட்களின் பின்னர் முட்டைகளில் இருந்து வெ
ஆமைக் குஞ்சுகள் இரண்டு நாட்கள் வரை குழிக்கு
அதாவது, அசைந்துகொண்டு உயிர் வாழும். முதல்
அவை குழிக்குள் அங்கும் இங்கும் செல்வதால், அ
குழியின் மேற்பகுதியிலும் இருபக்கங்களிலும் உள்
பகுதியில் விழுந்து நிறைவதால் [illegible] து குழியில் [illegible]
இயல்பாக மேலே உயர்ந்து வெளியேற உதவுகின்ற
இரண்டாம் நாள் இரவு இந்தக் குஞ்சுகள் குழிக்குள்
வருகின்றன.

## குஞ்சுகளின் எதி

இரவு வேளைகளில் குழியில் இருந்து வெளியே
நீரின் மீது விழுகின்ற நிலவொளியிலும் விண்மீன்
சமுத்திரத்தை நோக்கி ஓடும். இவ்வாறு கடலை நே

# இலங்கையில் காணக்கிடைக்கி

## வெளவால் கடல் ஆமை

- **வேறு பெயர்கள்:** எண்ணெய் கடல் ஆமை, கப்பல் கடல் ஆமை, மாவல்லா.
- **ஆங்கிலப் பெயர்:** Leatherback Turtle.
- **விலங்கியல் விஞ்ஞானப் பெயர்:** *Dermochelys coriacea.*

எமக்குப் பெருமளவில் காணக்கிடைக்கின்ற கடல் ஆமை வகை இதுவாகும். இது உருவத்தில் மிகப்பெரியது. இதன் நன்கு வளர்ச்சி அடைந்த ஆமை ஒன்றின் நிறை 600 முதல் 700 கிலோகிராம் வரை காணப்படும். அதன் நீளம் ஏறக்குறைய 3 மீற்றர் அளவு இருக்கும். குளிரான கடலை விரும்பாத இவை, வெப்பமான கடலையே மிகவும் விரும்புகின்றன. எனினும், இரை தேட சிரமமாகும் சந்தர்ப்பங்களில் 4000 கிலோமீற்றர் தொலைவில் உள்ள 'ஆர்க்டிக்' குளிர் கடல் வலயம் வரை நீந்திச் செல்லும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஏனைய கடல் ஆமைகளுக்கில்லாத ஒரு விசேட அம்சம் வெளவால் கடல் ஆமைகளுக்கு உண்டு. அவை தமது சீர உஷ்ணத்தை தாமே கட்டுப்படுத்திக்கொள்ளும் திறமையைப் பெற்றுள்ளன என்பதே அதுவாகும்.

மத்தியதரைக்கடல் பிரதேசம், அட்லாண்டிக் சமுத்திரம், பசுபிக் மற்றும் இந்து சமுத்திரம் ஆகிய வலயங்களிலேயே இவை அதிகம் காணப்படுகின்றன.

## கண்ணாடிக் கடல் ஆமை

இதனைப் 'பெருந்தலை கடல் ஆமை' என்றும் அழைப்பர்.

- **ஆங்கிலப் பெயர்:** Logger head Turtle.
- **விலங்கியல் விஞ்ஞானப் பெயர்:** *Caretta caretta gigas.*

இவை மிகப்பெரிய தலையை உடையவை. இதன் நீளம் சுமார் 1 மீற்றராகும். அதன் நிறை சுமார் 180 கிலோகிராம் ஆக இருக்கும். இவை செங்கடலில் பெருமளவில் வாழ்கின்றன. வளைகுடா, இந்தியாவின் மேற்குக் கடல், மொசம்பிக் நாட்டின் மேற்குக்கரை, மடகஸ்காரின் தென்பகுதிக்கரை, அவுஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள ரெக் தீவு, கியூபாவுக்கருகில் உள்ள கடல் பகுதி என்பன கண்ணாடிக் கடல் ஆமைகள் அதிகம் வாழும் ஏனைய வலயங்களாகும். மாமிச உண்ணியான இதற்கு விலங்குகளின் மாமிசத்தை கிழித்து உண்பதற்கேற்ற வகையில் உறுதியான கூர்முனைகள் இரண்டு உள்ளன. இக்கடல் ஆமையின் இறைச்சி மனிதன் உண்பதற்கு உகந்ததன்று. அதனால், வலையில் சிக்கினாலும் அதனைக் கைவிட்டுவிடுவர்.

## சேற்றுக் கடல் ஆ

- **வேறு பெயர்கள்:** பறை கடல் ஆமை, கிளி அ
- **ஆங்கிலப் பெயர்:** Olive ridley Turtle.
- **விலங்கியல் பெயர்:** *Lepidochelys olivacea*

கிளியின் அலகைப் போன்ற அலகு இருப்பதால்
ஆமைகளை 'கிளி அலகு' என்று [illegible] அழைக்கின் [illegible]
கபில நிறமாகும். உருவத்தில் சிறிய இந்த வகைக்
50 கிலோகிராம் ஆகும். நீளம் 75 சென்ரிமீற்றரிலு
லும் ஆழமற்ற கடலிலேயே வாழ்கின்றன. இந்து ச
கொஸ்டாரிகா, நிக்கரகுவா, எல் சல்வடோர், ஹொ
கரையோரப் பிரதேசங்களில் முட்டை இடுவதற்கா

## கல் கடல் ஆமை

இதனை மணல் கடல் ஆமை என்றும் அழைக்கி

- **ஆங்கிலப் பெயர்:** Green Turtle.
- **விலங்கியல் பெயர்:** *Chelonia myolas.*

இதன் மேற்பகுதி ஒலிவ் கபில நிறமாகும். மஞ்ச


வெளவால் கடல் ஆமை


கண்ணாடிக் கடல் ஆமை


சேற்றுக் கடல் ஆமை


கல் கடல் ஆமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டையிட்ட பின்னர்




முட்டையிட்டு முடிந்த பின்னர் பெண் கடல் ஆமை அதன் பின்னங்கால்களால் மணலினால் முட்டைக் குழியை மூடிவிடும். தனது முன்னங்கால்களால் பின்புறம் நோக்கி மணலை வீசியே இவ்வாறு செய்யும். இவ்வாறு செய்வதற்கு கடல் ஆமையொன்றிற்கு சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை எடுக்கும்.
மூடிய பின்னர் அது மீண்டும் சமுத்திரத்திற்குள் னபோன்று கடல் ஆமைகள் முட்டைகளை அடை டகள் இயற்கையாகவே அடைகாக்கப்பட்டு, ு, 60 நாட்களில் சூரிய வெப்பத்தால் மணல் பொரித்து குஞ்சுகள் வெளிவரும்.

## சுகளின் பிறப்பு

டைகளில் இருந்து வெளிவரும் கடல் ட்கள் வரை குழிக்குள்ளேயே பயணித்து உயிர் வாழும். முதல் நாள் பகல்வேளையில் வரும் செல்வதால், அந்த அசைவின் காரணமாக நபக்கங்களிலும் உள்ள மணல் குழியின் அடிப் ல் ... து குழியில் ... ள ஆமைக் குஞ்சுகள் வெளியேற உதவுகின்றது. அதன்படி, குஞ்சுகள் குழிக்குள் இருந்து வெளியே

## சுகளின் எதிரிகள்


ல் இருந்து வெளியே வரும் குஞ்சுகள், சமுத்திர ளியிலும் விண்மீன் ஒளியிலும் மிக வேகமாக இவ்வாறு கடலை நோக்கிச் செல்லும் குஞ்சுகள், நண்டுகள் மற்றும் கடல் பறவைகள் போன்ற உயிரினங்களின் தொல்லை களுக்கு இலக்காகும் வாய்ப்புகள்



அதிகமுள்ளன. அவ்வாறே, சமுத்திரத்திற்குள் சென்ற பின்னர் அங்கு வாழும் பெரிய மீன்களாலும் ஏனைய சமுத்திர வாழ் உயிரினங்களாலும் இந்த சின்னஞ்சிறு குஞ்சுகளுக்கு ஏற்படும் தொல்லைகளோ மிகமிக அதிகம். இந்த தொல்லைகளையும் தாண்டி அவை தொடர்ச்சியாக 48 மணித்தியாலங்களுக்கு கடலில் நீந்திச் செல்லும்.

## உணவும் வளர்ச்சியும்

இவ்வாறு தொடர்ந்து 48 மணித்தியாலங்களாக நீந்திச் செல்லும் வரையில் இந்த குஞ்சுகள் எத்தகைய உணவினையும் உட்கொள்வதில்லை. இக்காலகட்டத்தில் வயிற்றில் எஞ்சியிருக்கும் முட்டையின் எச்சங்களையே அவை போசணையாகப் பெறுகின்றன. பின்னர் அங்கு மிதக்கும் சிறு உயிரினங்களையும் தாவரங்களையும் அவை உணவாகக்கொள்கின்றன. கடல் ஆமைக் குஞ்சுகள் வளர்ச்சியடைந்து பருவமடைய 30 ஆண்டுகள்வரை செல்லும்.






# க்கின்ற கடல் ஆமை வகைகள்

## றுக் கடல் ஆமை

டல் ஆமை, கிளி அலகு.
e ridley Turtle.
*pidochelys olivacea.*
அலகு இருப்பதால் இந்த வகை கடல் று ... அழைக்கின் ... . இதன் மேற்பகுதி ஒலிவ் சிறிய இந்த வகைக் கடல் ஆமையொன்றின் நிறை 75 சென்ரிமீற்றரிலும் குறைவு. இவை பெரும்பா ாழ்கின்றன. இந்து சமுத்திரம், பசுபிக் சமுத்திரம், ல் சல்வடோர், ஹொண்டுராஸ் ஆகிய நாடுகளின் முட்டை இடுவதற்காக இவை வருகின்றன.

## ல் கடல் ஆமை

என்றும் அழைக்கின்றனர்.
n Turtle.
*elonia myolas.*
ல நிறமாகும். மஞ்சள், பச்சை, கறுப்பு ஆகிய வர்ணங்களையும் கொண்டிருப்பதால், பார்வைக்கு மிக அழகிய தோற்றமுடைய ஒரு வகைக் கடல் ஆமையாகும். வயிற்றுப்பகுதி சாம்பல் மற்றும் வெள்ளை நிறம் கொண்டுகாணப்படுகின்றது. இது சுமார் ஒரு மீற்றர் அளவு நீளமும் 200 முதல் 250 கிலோகிராம் வரையான நிறையையும் கொண்டுள்ளது. இந்தியாவின் உலர் கடற்கரைப் பிரதேசங்களிலும் அட்லாண்டிக் சமுத்திரம் மற்றும் அமைதி யான கடல் பகுதிகளிலும் கல் கடல் ஆமைகள் அதிகம் காணப்படுகின்றன.

## பட்டைக் கடல் ஆமை

* **வேறு பெயர்கள்:** பருந்து அலகு, கோழி கடல் ஆமை
* **ஆங்கிலப் பெயர்:** Hawksbill Turtle.
* **விலங்கியல் பெயர்:** *Eretomchelys imbricata.*

ஆமைக் குடும்பத்தின் அழகிய உறுப்பினர் 'பட்டை'க் கடல் ஆமையாகும். இது 90 செ.மீற்றர் அளவு நீளமானது. 50 கிலோகிராமிலும் குறைந்த அளவு நிறையுடையது. மிகவும் சக்தி வாய்ந்த அலகைக் கொண்டிருப்பதால், இதனிடம் சிக்குகின்ற எந்த உயிரினமும் இலகுவில் தப்பமுடியாது.

இந்த வகைக் கடல் ஆமைகள் இந்து சமுத்திரத்திலும் பசுபிக் சமுத்திரத்திலும் அதிகம் காணப்படுகின்றன. இலங்கையைத் தவிர சிசெல்ஸ் தீவுகளைச் சூழவுள்ள தீவுகள், பபுவா நியூகினியா தீவு, மேற்கிந்திய தீவுகள், சொலமன் தீவுகள் போன்ற கரையோரங்களுக்கு முட்டையிடுவதற்காக வருகின்றன. விஷத்துடன்கூடிய ஸ்பென்ஜினை இவை இரையாகக்கொள்வதால், அந்த விஷம் இதன் உடம்பினுள் படிந்து விடுகிறது. இந்தக் கடல் ஆமைக்கு அதனால் பாதிப்பு இல்லாவிட்டாலும், இதனை உணவாகக்கொள்பவர் களுக்கு கடும் விஷம் காரணமாக உயிரிழப்பு ஏற்படலாம்.

## இலங்கையில் காணக்கிடைக்காத கடல் ஆமை வகைகள்

### தட்டைக் கடல் ஆமை

* **ஆங்கிலப் பெயர்:** Flatback Turtle.
* **விலங்கியல் பெயர்:** *Natator depressus.*

### கெம்ப் சேற்றுக் கடல் ஆமை

**ஆங்கிலப் பெயர்:** Kemp's Ridley Turtle.
**விலங்கியல் பெயர்:** *Lepidochelys kempil.*

### கறுப்புக் கடல் ஆமை

* **ஆங்கிலப் பெயர்:** Black Turtle
* **விலங்கியல் விஞ்ஞானப் பெயர்:** *Chelonia agazizii*


கடல் ஆமை


பட்டைக் கடல் ஆமை


தட்டைக் கடல் ஆமை


கெம்ப் சேற்றுக் கடல் ஆமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(12,13 ஆம் பக்க தொடர்ச்சி)

# இலங்கையில் கடல் ஆமைகள் அதிகம் வாழும் இடங்கள்

இலங்கையைச் சூழ்ந்த கடற்கரைப் பிரதேசங்களில் 5 வகையான கடல் ஆமைகள் முட்டைகளை இடுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள வரைபடத்தில் வெள்ளை நிறத்தில் காட்டப்பட்டுள்ளவை முட்டை இடுவதாக அறியக்கிடைத்துள்ள கடற்கரைப் பிரதேசங்களாகும். அதில் இலக்கமிடப்பட்டுள்ளவை கடல் ஆமைகள் முட்டை இடுவதாக உறுதியாக இனங் காணப்பட்டுள்ள பிரதேசங்களாகும்.



மீன் வலையில் சிக்கிய கடல் ஆமையொன்றைக் காப்பாற்றுதல்.




| வரைபட இலக்கம் | இடம் | வகைகள் |
|---|---|---|
| 01 | இந்துருவ | கல் கடல் ஆமை, சேற்றுக் கடல் ஆமை, வெளவால் கடல் ஆமை. |
| 02 | கொஸ்கொட | கல் கடல் ஆமை, சேற்றுக் கடல் ஆமை, வெளவால் கடல் ஆமை, கண்ணாடிக் கடல் ஆமை, பட்டைக் கடல் ஆமை. |
| 03 | அக்குரெல்ல | கல் கடல் ஆமை. |
| 04 | மாவெல்ல | கல் கடல் ஆமை, வெளவால் கடல் ஆமை. |
| 05 | ரெகவ | கல் கடல் ஆமை, சேற்றுக் கடல் ஆமை, வெளவால் கடல் ஆமை, பட்டைக் கடல் ஆமை, கண்ணாடிக் கடல் ஆமை. |
| 06 | கஹந்தமோதர | பட்டைக் கடல் ஆமையைத் தவிர ஏனைய அனைத்தும். |
| 07 | உசன்கொட | வெளவால் கடல் ஆமை. |
| 08 | அம்பலன்தொட்ட | கல் கடல் ஆமை. |
| 09 | புந்தல | கல் கடல் ஆமை, சேற்றுக் கடல் ஆமை, வெளவால் கடல் ஆமை, கண்ணாடிக் கடல் ஆமை, பட்டைக் கடல் ஆமை. |
| 10 | யால | கல் கடல் ஆமை, வெளவால் கடல் ஆமை, சேற்றுக் கடல் ஆமை. |
| 11 | கந்தகுலிய | முட்டை இடுவது குறித்து தகவல் இல்லை. எனினும், வருடந்தோறும் ஆயிரக்கணக்கிலான சேற்றுக் கடல் ஆமைகள் கொல்லப்படுகின்றன. |

## கடல் ஆமைகளின் அழிவு விபரம்



பெரும் எண்ணிக்கையிலான சேற்றுக் கடல்ஆமைகள் கடற்கரையோரமாக வந்து முட்டை இடுகின்றன.

கடல் ஆமை இனமானது உலகில் மிக விரைவாக அருகி வருகின்ற உயிரினமாக இன்று கருதப்படுகின்றது. அவற்றின் அண்மைக்கால அழிவு விபரங்கள் வருமாறு;

✱ 1947ஆம் ஆண்டு மெக்ஸிகோ விரிகுடாவில் கெம்ப் சேற்று ஆமைகள் சுமார் 60,000 இற்கும் மேல் காணப்பட்டன. எனினும், 1992 இல் இத்தொகை 2000 இலும் குறைந்துவிட்டது.

✱ 1983 இல் மெக்ஸிகோவில் சேற்றுக் கடல் ஆமைகள் 79,900 ஆக இருந்தபொழுதிலும், 1992 இல் 1000 ஐ விடக் குறைவடைந்துள்ளது.

✱ இலங்கையிலுள்ள கடல் ஆமைகளின் எண்ணிக்கையை உறுதியாகக் கூறமுடியாவிட்டாலும், இலங்கைக்கு வருகின்ற ஐந்து வகையான கடல் ஆமைகளும் அருகி வருகின்றன.

✱ 1981 இல் ஈக்வடோரில் சேற்றுக் கடல் ஆமைகள் 300,000 ஆக இருந்தன. அதுவே, 1992 இல் 2000-3000 வரையிலேயே இருந்தன.

✱ 1980 களில் மலேசியாவின் டெரெங்கானா பிரதேசத்தில் வெளவால் கடல் ஆமைகள் 4000 ஆக இருந்தபொழுதிலும், 1992 இல் 1000 இலும் குறைந்துவிட்டன.

✱ புள்ளிவிபரங்களின்படி, 1000 முட்டைகளுக்கு ஒன்று மாத்திரமே வளர்ச்சி அடைந்த நிலையில் உயிர் தப்புகின்றது.

இதேவேளை, முட்டைகளை இட்ட பின்னர் தாய் கடல் ஆமைகள் கடலுக்குள் சென்றுவிடுகின்றன. சூரிய வெப்பத்தால் சூடாகும் மணலின் உஷ்ணத்தினாலேயே அந்த முட்டைகள் பொரிக்கின்றன. இத்தகைய பாதுகாப்பற்ற தன்மையினாலும் மனித நடவடிக்கைகளாலும் கடல் ஆமைகள் அருகி வருவதாகக் கருதப்படுகின்றது.

## கடல் ஆமைகளுக்கு இழைக்கும் கொடுமைகள் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

அண்மைக்காலத்திலிருந்து கடல் ஆமைகளின் வாழ்க்கை வட்டம் மனிதனின் முறையற்ற செயல்களால் பெரிதும் தாக்கமடைந்து வருகின்றது. சமுத்திரம் மாசடைதலானது அவற்றின் வாழ்க்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

உதாரணமாக, 'லொடியன்' எனும் கடல் உணவை உட்கொண்டு வாழும் வெளவால் கடல் ஆமைகள் கடலில் மிதக்கும் பொலித்தீன், பிளாஸ்டிக் என்பனவற்றை 'லொடியன்' என நினைத்து விழுங்கிவிடுகின்றன. இதனால், அப்பொருட்கள் ஆமைகளின் வயிற்றில் இறுகி, உணவு உண்பதில் சிரமத்தை ஏற்படுத்திவிடும். அதனால் அவை இறக்கின்றன. அத்துடன்,

✱ புதிய மீன்பிடி உபகரணங்களின் பாவனையினாலும் கடல் ஆமைகளின் இருப்பிற்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்படுவதாக தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதிகமான சந்தர்ப்பங்களில் மீன் பிடிக்கும் 'நைலோன்' வலைகளில் சிக்கும் கடல் ஆமைகள் மூச்சுத் திணறி இறந்து விடுகின்றன.

✱ இயந்திரப் படகுகளும் கடல் ஆமைகளுக்கு கடுமையான காயங்களை ஏற்படுத்திவிடுகின்றன. இந்த விலங்கினம் நீரின் மேற்பகுதிக்கு வரும்



சந்தர்ப்பங்களிலேயே இவ்வாறு நடைபெறுகின்றது.

✱ கடற்கரைக்கு அண்மையில் கட்டப்பட்டுள்ள பாரிய ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், தங்குமிடங்களில் பொருத்தப்பட்டுள்ள ஒளி விளக்குகளின் ஒளிக்கதிர்களும் முட்டையிடுவதற்காக கரைக்கு வருகின்ற பெண் விலங்கிற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

✱ கரையோரத்தில் வாழ்பவர்கள் கடல் ஆமை முட்டைகளைப் பெருமளவில் சேகரிப்பதும் அவற்றுக்கு இழைக்கப்படுகின்ற மற்றொரு தீங்காகும்.

## எம்மால் செய்யக்கூடியவை

✱ ஆமை ஓட்டினால் செய்யப்பட்ட கைத்திறன் பொருட்களைக் கொள்வனவு செய்யாதிருத்தல். இதனை உங்கள் நண்பர்கள், குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் நீங்கள் சந்திக்கும் உல்லாசப் பயணிகளிடம் அறிவுறுத்துங்கள்.

✱ கழிவுப் பொருட்களை நதிகளில் அல்லது சமுத்திரங்களில் சேரவிடாது பார்த்துக்கொள்ளல்.

✱ கழிவுப்பொருட்களாலும் சூழல் மாசடைவதாலும் பெருமளவு கடல் ஆமைகள் அழிந்துவிடுகின்றன. எனவே, நீங்கள் கடற்கரைப் பகுதியில் வசிப்பவராயின், உங்கள் ஆசிரியரின் வழிநடத்தலில் சக மாணவர்களுடன் இணைந்து கடற்கரையைச் சுத்தப்படுத்தும் வேலைத்திட்டத்தை ஏற்பாடு செய்து, உங்கள் கடலோரப் பிரதேசத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.

✱ கரையோரத்தில் முட்டை இடுவதற்காக அலையும் கடல் ஆமை ஒன்றை நீங்கள் கண்டால், அதனை நோக்கி ஒளி பாய்ச்சுவதைத் தவிருங்கள்.

(அ)

## கடல் ஆமைகளை பாதுகாக்கும் சட்டம்



தூண்டிலில் சிக்கிய கடல் ஆமையொன்றை விடுவித்தல்.

1972 ஆம் ஆண்டு இலங்கையில் விலங்கினங்கள் மற்றும் தாவரங்களைப் பாதுகாக்கும் சட்டத்துடன், பின் இணைப்பாக கடல் ஆமையும் அவற்றின் முட்டைகளும் சட்டத்தினால் பாதுகாக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும், இந்தச் சட்டத்தைக் கவனத்தில்கொள்ளாது கடல் ஆமைகளைக் கொல்வதும் அதன் முட்டைகளை உணவிற்காக எடுப்பதும் தொடர்ந்து நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிக்குள் பூக்கும் மலர்





பூமிக்குள்ளேயே செடியாக வளர்ந்து பூக்கும் மலர் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ரிஸான்தெல்லா கார்ட்னேரி (Rhizanthella Gardneri) என்னும் இந்த 'ஓர்கிட்' மலர் இனம் அவுஸ்திரேலியாவில் காணப்படுகிறது. 1928 ஆம் ஆண்டின் இளவேனிற்காலத்திலேயே இந்த மலர் கண்டுபிடிக்கப்பட்டது.

ஜென் ட்ரொட் என்னும் விவசாயி ஒருவர் தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது பூமியில் ஏற்பட்டிருந்த வெடிப்பிலிருந்து சிறு உயிரினங்கள் வெளி வருவதையும் அங்கு இனிய சுகந்தம் வீசிக் கொண்டிருந்ததையும் அவதானித்துள்ளார். அந்த இடத்தை ஆராய்ந்து பார்த்த போது உள்ளே சிறிய அழகிய மலர் ஒன்று மலர்ந்திருப்பதைக் கண்டுள்ளார். அவர் கண்டுபிடித்த அந்த மலர் ஒரு புதிய வகை 'ஓர்கிட்' ஆகும். வெள்ளை நிற, இலையில்லாத இந்த பூச்செடி குழாய் வடிவிலானது. ஏனைய 'ஓர்கிட்' இன மலர்கள் போல் அல்லாது இந்த வகை 'ஓர்கிட்' தனது வாழ்நாள் முழுவதையும் பூமிக்குள்ளேயே கழிக்கின்றது. இந்த மலருக்கு சூரிய ஒளி கிடைப்பதில்லை. இந்த மலர் மே, ஜூன் மாதங்களில் பூக்கின்றது.

ஓர்கிட் இன மலர்கள் விதம் விதமான வண்ணங்களில் இருக்கும். அவை செடியின் தண்டுப்பகுதி, கிளைகள், மரங்கள், தரை, பாறைகளிலும் கூடப் பூக்கும். ஆனால்,இந்த ஓர்கிட் மலர் மட்டும் தரைக்கு மேல் எழுவதே இல்லை. இது வளரத்தொடங்கும்போது இதற்குக் கீழ் உள்ள நிலம் விரிசல் அடைகிறது. அந்த விரிசலுக்குள்ளேயே இம்மலர் பூக்கின்றது. இதன் இனிய மணம் காரணமாக வண்டினங்களும் கரையான்களும் இம்மலர்களை வந்தடைகின்றன.

அவையே இந்த ஓர்கிட்டின் அயல் மகரந்தச் சேர்க்கைக்கும் உதவுகின்றன. அயல், மகரந்தச் சேர்க்கைக்கு கரையான்களின் உதவியைப் பெறும் ஒரே ஒரு தாவரம் இதுவாகத்தான் இருக்கவேண்டும்.

# கலிலியோவின் கைவிரல்

அழகிய கண்ணாடிக் குவளையினுள் மரக்குச்சியொன்று இருப்பது ஒன்றும் ஆச்சரியமான விடயமன்று. ஆனால், படத்தில் நீங்கள் காணும் குவளையினுள் இருப்பது மரக்குச்சி அன்று. அது கைவிரல்! என்றால் உங்களால் நம்ப முடிகின்றதா? தொலை நோக்கியைக் கண்டுபிடித்த விஞ்ஞானி கலிலியோ கலிலியின் வலது கரத்திலிருந்து அகற்றப்பட்ட விரல்தான் இது.



1642 ஆம் ஆண்டில் கலிலியோ கலிலி உயிரிழந்தார். பின்னர் 1737 ஆம் ஆண்டில் அவரது சடலம் வெளியே எடுக்கப்பட்டு, அதிலிருந்து மூன்று விரல்களும் பற்களும் அகற்றி எடுக்கப்பட்டன. அதனை லண்டனில் உள்ள 'கடோலா என்ட் பார்ட்னர்ஸ்' நிறுவனத்தினர் அவரின் ஞாபகார்த்தமாகப் பாதுகாத்து வந்தனர். எனினும், ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் காணாமல் போன இந்த கைவிரல் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. அடுத்த வருடம் திறக்கப்பட இருக்கும் 'ஸ்டோரியோ டி சைன்சா' என்ற அருங்காட்சியகத்தில் மீண்டும் இதனை பார்வைக்கு வைக்கவுள்ளனர்.

# வாசிப்பின் வல்லமை கூறும் சிற்றேடு

'சேமமடு நூலகம்' கார்த்திகை வாசிப்பு மாதச் சிறப்பிதழ் 'ஏடது கைவிடேல்' என்ற சான்றோர் வாக்கை வலியுறுத்துகின்றது. மனிதனது சுவாசக்காற்றுக்கு நிகரானது வாசிப்பு என்பதை இச்சிறப்பிதழில் காணப்படும் ஒவ்வொரு கட்டுரையும் உணர்த்துகின்றன. 32 பக்கங்களையுடைய இச்சிற்றேட்டில் நாடு போற்றும் கல்விமான்கள் வாசிப்பின் தேவை குறித்து எழுதியிருப்பதோடு, வாசிப்புக்குத் தாய் மடியாகச் சேவிக்கும் நூலகங்கள் குறித்தும் கருத்து வெளிப்படுத்தி இருக்கின்றனர். இப்பொழுது வாசிப்பு அச்சுத்தாளிலிருந்து-இலத்திரனியல் ஊடகங்களான கணினி, இணையம், மின்னஞ்சல் என்பவற்றிற்கும் தாவி இருக்கின்றது. ஆனால், இவைகளுக்கு அத்திவாரமாக அமைந்தது நூல் வாசிப்புத்தான்! நவீன விஞ்ஞானம் மேலும் வேறெதற்குக் கொண்டு செல்லுமோ? காத்திருப்போம்!




"வாசிப்பென்பது ஒரு கல்விச் செயற்பாடு; ஒரு பொழுதுபோக்கல்ல" என இலக்கணப்படுத்துகிறார் பேராசிரியர் சோ.சந்திரசேகரன். அத்தோடு, "பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் ஒரு பிரதான அம்சம்" எனவும் நூலகத்தின் தேவையையும் கற்போருக்கு உணர்த்தியிருக்கிறார்.

"பெற்றோர்கள் பிரிந்து வாழ நேருதல், கற்றல் இடர்ப்பாடுகள் ஏற்படல், குடும்பத்தில் மற்றொரு குழந்தையின் வரவு போன்ற நெருக்கீடுகள் தரும் சந்தர்ப்பங்களில் பிள்ளைகளுக்கு வாசிப்பு சிகிச்சை தரும்" எனக்கூறும் கோகிலா மகேந்திரன், "பிள்ளைகள் வாசித்த ஒரு நூலைப் பெற்றோரும் வாசித்துவிட்டு அது பற்றிக் கலந்துரையாடுவது சிறந்தது' எனக்கூறி பெற்றோரையும் வாசிக்க இழுக்கிறார்.

பரந்த வாசிப்பின்மை-மாணவருக்கு சொல் வளக்குறைவு, கருத்து வெளிப்பாட்டுக் குறைபாடு, ஒழுங்கற்ற மொழிப் பிரயோகம் என்பனவற்றை ஏற்படுத்துமெனச் சுட்டியிருக்கும் திக்குவல்லை கமால் தற்போதுள்ள நூலகங்களில் காணப்படும் வசதியீனங்கள் மாணவர்களது வாசிப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்துமெனவும் எச்சரிக்கிறார்.

இப்படியாக இவ்விதழில் காணப்படும் அனைத்துக் கட்டுரைகளும் சகலரது வாசிப்பையும் பெருக்கிப் புலமையாளராக்குவதற்கு உதவக் கூடியவை. படித்து அறிவை வளப்படுத்துங்கள்.

'சேமமடு' என்றால் தயங்கவேண்டாம்! அது வவுனியாவிலுள்ள கிராமம். அந்த ஊரவரான சதபூ.பத்மசீலன் என்பவரே இச்சிற்றேட்டின் வெளியீட்டாளர்.

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3339
தி.ஜிவிஷன், தரம் - 6, யாழ்ப்பாணக் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3340
எம்.இஹாப், பாலர் வகுப்பு, குட் ஹோப் ச.பாட., மாவனல்லை.


அங்.இல: 3341
மு.அருண், தரம் - 10, கிளிநொச்சி ம.வித்., கிளிநொச்சி.


அங்.இல: 3342
சஸ்னி சஜாத், தரம் - 11, ஸாஹிரா கல்., கல்முனை.


அங்.இல: 3343
ஆ.சிவசங்கர், தரம் - 9, யாழ்.இ.கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3344
எம்.நிம்ரான், தரம் - 6, அல்-இல்மா மு.வித்., முருதலாவ.


அங்.இல: 3345
செ.அனோஜா, தரம் - 10, யா/உடுவில் மகளிர் கல்., உடுவில்.


அங்.இல: 3346
முன்ஷீப் அஹமட், தரம் - 6, அல்-ஹிலால் வித்., கல்முனை.


அங்.இல: 3347
யோ.டோஜிகா, தரம் - 6, யா/இணுவில் இ.கல்., இணுவில்.


அங்.இல: 3348
எம்.ரிஸ்லான், தரம் - 11, அல்-முர்சித் ம.வித்., பதுளை.


அங்.இல: 3349
ஜி.ஃபைகர், தரம் - 9, ஸாஹிரா தே.கல்., புத்தளம்.


அங்.இல: 3350
இன்ஷமாமுல் ஃபரீட், தரம் - 6, ஜாமியுல் அஸ்ஹர் மத்.கல்., கண்டி.


அங்.இல: 3351
சி.நிஷான், தரம் - 10, அல்வாய் ஸ்ரீ லங்கா வித்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3352
இ.டிசாந்தன், தரம் - 9, த.ம.ம.வித்., வவுனியா.


அங்.இல: 3353
நெபெஸ் றோச்,தரம் - 7, உவர்மலை விவேகானந்தா கல்., திருகோணமலை.


அங்.இல: 3354
பூ.சரணியா, தரம் - 11^A, நு/கொட்டகலை த.ம.வித்.,கொட்டகலை.


அங்.இல: 3355
எம்.ஜெயரட்ணம், தரம் 7, நு/இராணிவத்தை த.வித்., இராணிவத்தை.


அங்.இல: 3356
ஜெ.நிதிபரன், தரம் - 10, புனித அந்தோனியார் வித்., கிளிநொச்சி.


அங்.இல: 3357
எம்.சியாத், தரம் - 7, டீ.எஸ்.சேனாநாயக்க கல்., கொழும்பு.


அங்.இல: 3358
எம்.ரப்லான், பிரிவு - ஹிஃப்ல், அல்-உஸ்வதுல் ஹசனா அ.கல்., குருநாகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

உடத்தலவின்ன மடிகே 'English Academy' பாலர் பாடசாலையின் கலைவிழா அண்மையில் உடத்தலவின்ன மடிகே ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. மேடையேறிய கலைநிகழ்வுகள் சிலவற்றையே படங்களில் காண்கின்றீர்கள்.

*(படமும் தகவலும்: எஸ்.ஐ.எம்.நளீம்-தலவின்ன)*



கெங்கல்ல-அம்பாக் கோட்டையைச் சேர்ந்த தயா தம்பதியரின் செல்வப் புதல்வன் காமினி, 30.01.2010 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்-தனுஷிகா)*

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

### எனது ஆசிரியர்




பி.பிரசன்னா, தரம் - $7^{B}$, புனித மரியாள் த.ம.வித்., எட்டியாந்தோட்டை.




றிப்னா பர்வின், தரம் - $8^{C}$, மட்/அல்-அஸ்ஹர் வித்., ஏறாவூர்-03.

### ஐஸ்பழம்



பி.சாகித்தியா, தரம் - $4^{A}$, புனித மரியாள் ம.கல்., பொகவந்தலாவ.



எஃப்.மர்ஜியா, தரம் - $5^{B}$, எதுன்கஹகொட்டுவ மு.ம.கல்., எதுன்கஹகொட்டுவ.

### மரங்கள் நடுவோம்



ஆர்.ஹரிதரன், தரம் - $9^{A}$, கதிரேசன் த.ம.வித்., தெரணியகலை.



க.யதுஷன், தரம் - $9^{C}$, யாழ்.மத்திய கல்., யாழ்ப்பாணம்.

### மீன் வியாபாரி



ஜி.ரிகாசினி, தரம் - 10, தெய்வகந்தை த.வித்.,சாமிமலை.



எம்.சுஜாவ்டீன், தரம் - $11^{C}$, பு/பள்ளிவாசல்துறை மு.ம.வித்., பள்ளிவாசல்துறை.

### எனது வீடு



பா.மதுர்ஷனா, தரம் - $2^{B}$, நு/மெராயா த.ம.வித்., லிந்துலை.



எம்.ஆர்.அப்துல்லாஹ், தரம் - $1^{D}$, புனித அந்தோனியார் கல்., கண்டி.

### மாட்டு வண்டி



மொஹமட் இம்ரான், தரம் - 6, கனேத்தன்னை மதீனா மு.ம.வித்., மாவனல்லை.



எஃப்.ரிஸ்னா, தரம் - $7^{B}$, சேர் ராஸிக் பரீட் மு.வித்., கொழும்பு-15.





## கைவண்ணங்கள் த.பெ.எண் 2037 கொழும்பு



எஃப்.ரஸ்னா, தரம் - $9^{A}$, குருகுத்தலை மு.ம.வித்., குருகுத்தலை.



எம்.தஸ்னீம், தரம் - $6^{A}$, ஜெய்லானி தே.பாட., பலாங்கொடை.



யூனுஸ் உமர், தரம் - $1^{B}$, மின்ஹாத் தே.பாட., திக்குவல்லை.



எஃப்.ரியாஸா, தரம் - 9, முஸ்லிம் ஹல்மில்லாவ மு.வித்., மதவாச்சி.

## மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

**முடிவுத்திகதி 12.02.2010**

### ஏப்ரல் மாதத்துக்கான தலைப்புகள்

- ★ தரம் 1-5 - வண்ணத்துப்பூச்சி அல்லது கார்
- ★ தரம் 6-8 - கார்ட்டூன் கதாபாத்திரம் அல்லது தாமரைக்குளம்
- ★ தரம் 9-11 - ஆடும் குட்டியும் அல்லது சித்திரைப் புத்தாண்டு

**அன்பார்ந்த தம்பி, தங்கைகளே!**

நாம் கொடுக்கும் தலைப்புகளில் உங்கள் கைவண்ணங்களை விரைவில் அனுப்பி வையுங்கள். தெரிவு செய்யப்படும் கைவண்ணங்கள் இப்பகுதியில் பிரசுரமாகும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள். அத்துடன் உங்கள் பெயர், தரம், பாடசாலை, கைவண்ணத்தின் தலைப்பு என்பனவற்றை மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நெட்ஃபோனில்' எவ்வாறு குறைந்த கட்டணத்தில் பேசமுடிகின்றது?

வெளிநாடுகளில் உள்ளவர்களுடன் இணையத்தின் ஊடாக குறைந்த கட்டணத்தில் எவ்வாறு பேசமுடிகின்றது? இது எவ்வாறு சாத்தியப்படுகின்றதென்றால், பொதுவாக இரண்டு கணினிகளுக்கிடையே தரவுகள் பரிமாறிக் கொள்வதைப் போன்றதோர் செயற்பாடுதான் இது. அதாவது, குரல் ஒலியை 'டிஜிட்டல்' தரவுகளாக மாற்றிப் பரிமாறிக் கொள்வதாகும்.










'வொய்ஸ் செட்' (Voice Chat) என்றும் இதனைக் குறிப்பிடலாம்.

இவ்வாறே, உள்நாட்டிலுள்ள நபர் ஒருவர் வெளிநாட்டிலுள்ள ஒருவருடன் நெட்ஃபோனில் பேசுவதாக குறிப்பிடுவது எவ்வாறு சாத்தியப்படுகின்றதென்றால், உள்நாட்டில் உள்ளவரின் தொலைபேசி இணைப்பானது இணைய வசதி கொண்ட கணினியுடன் தொடர்புபடுத்தப்பட்டிருத்தலாகும். இதன்படி, உள்நாட்டிலுள்ளவர் வெளிநாட்டில் எந்த இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணுகின்றாரோ அந்த தொலைபேசியுடன் இணைய வலைப்பின்னலின் ஊடாக தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும். அப்போது சாதாரணமாக தொலைபேசியில் பேசுவது போல் இருந்தாலும் குறித்த தொடர்பானது இணைய வலைப் பின்னலின் ஊடாக கடத்தப்படுகின்றது.

இதனால்தான் இவ்வாறான பேச்சுக்களின்போது எவ்வளவு நேரம் பேசப்பட்டதோ, அந்தளவிற்கு கட்டணம் அறவிடப்படல் என்று எதுவும் நடைபெறுவதில்லை. இணையத்தைப் பாவிப்பதற்கான மாத வாடகை மட்டுமே செலுத்த வேண்டியிருக்கும். ஆனால், தனியார் தொலைபேசி நிலையங்களில் 'நெட்ஃபோன்' என்ற இந்த முறையில் பேசுவதற்கு எவ்வாறு கட்டண அறவீடு செய்கின்றனர்? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். உண்மையில் அவர்கள் கூட தமது இணையத்திற்கான மாதாந்தக் கட்டணத்தை மாத்திரமே செலுத்துகின்றனர். பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்படுவது வெறும் சேவை அறவீட்டுக் கட்டணமேயாகும்.

இவ்வாறு இணையத்தின் வழியே கணினியிலிருந்து சாதாரண தொலைபேசிகளுக்குத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான வசதியை ஏற்படுத்துகின்ற இணையத்தளங்கள் பல உள்ளன. www.netphone.com, www.tesco.com, www.vonage.com, www.wow way.com, www.skype.com ஆகியன அவற்றுள் குறிப்பிடக்கூடியன. இவற்றின் ஊடாகத்தான் மேற்படி 'நெட்ஃபோன்' எனப்படும் அழைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.






## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# ஹெயிட்டி மக்களுக்கு உரிய நிவாரணங்கள் கிடைக்கவில்லையாம்

ஹெயிட்டியில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கென ஏராளமான உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளபோதிலும் குறித்த உதவிகள், நிவாரணங்கள் பாதிக்கப்பட்டவர்களை உரிய வகையில் சென்றடையவில்லை என்று குறிப்பிடப்படுகின்றது. இந்த பூமியதிர்ச்சியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் மரணமடைந்ததாக ஆரம்பத்தில் கூறப்பட்டாலும் இந்த எண்ணிக்கை தற்போது இன்னும் பல மடங்காக இருக்கும் என்று கூறப்படுகின்றது.





இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவும் என்று வெளிநாடுகளிலிருந்து ஏராளமான சமூக சேவையாளர்கள் ஹெயிட்டி நோக்கிச் சென்றுள்ளனர்.

இருப்பினும், எந்தவொரு உதவியும் உபகரணங்களும் உணவு வகைகளும் மக்களைச் சென்றடையாமையால் அந்த மக்கள் பெரிதும் கோபமுற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இவற்றைக் கருத்தில்கொண்டு பிரான்ஸ் அமெரிக்கா, பிரேஸில், கெனடா மற்றும் இவற்றை அண்டிய நாடுகளின் தலைவர்கள் அனைவரும் முக்கிய கலந்துரையாடலொன்றை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

# உலகிலேயே பாரிய பிரச்சினை வறுமையே

## ஆய்வில் தெரிவிப்பு

காலநிலை மாற்றம், பயங்கரவாதம் மற்றும் யுத்தம் ஆகியவற்றைவிட உலகிலுள்ள மக்களைப் பெரிதும் பாதித்துள்ள விடயம் வறுமையே என்று ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. பி.பி.ஸி உலகசேவைக்காக 'க்கொளட்ஸ்கேன்' என்ற நிறுவனம் மக்கள் மத்தியில் மேற்கொண்ட ஆய்வின் மூலமே இந்த உண்மை தெரியவந்துள்ளது.







இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்டவர்களில் 71 வீதமானோர் இன்றைய உலகில் பாரிய பிரச்சினையாக இருப்பது வறுமையே என்று குறிப்பிட்டுள்ளனர்.

64 வீதமானோர் காலநிலை மாற்றமே பாரிய பிரச்சினை என்றும், அதிகரித்துச் செல்கின்ற விலைவாசி மற்றும் எண்ணெய் விலை அதிகரிப்பு ஆகியவையே பாரிய பிரச்சினையாக இருப்பதாக 63 வீதமானோரும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், பயங்கரவாதம், மனித உரிமை மீறல்,தொற்று நோய் பரவல் ஆகியனவே பாரிய பிரச்சினையாக இருப்பதாக 58 வீதமானோர் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி, ஆய்விற்கென 25 நாடுகளைச் சேர்ந்த 25,000 மக்களை நேரில் சந்தித்து அவர்களின் கருத்துக்கள் அறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 240

**கேள்வி:** இன்றைய உலகில் பாரிய பிரச்சினையாக இருப்பது எது என்று ஆய்வின்மூலம் தெரியவந்துள்ளது?

**சரியான விடை.....................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 240,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 238 இன் சரியான விடை: டுபாய் டவர்

**பரிசு பெறுவோர்**

இ.சாந்தகுமார்,
கரப்பிட்டி பிள்ளையார் கோவிலடி,
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

விக்னேஸ்வரன்,
மே/பா ரகுராம்,
65 1/1 வைத்தியா வீதி, தெஹிவளை.

எம்.பாரிஸ்,
237, ஜயவர்தன மாவத்தை, திஹாரிய, கல-கெடி ஹேன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் அனிலுக்கும் பணிப்பாளருக்கும் இடையில் நடைபெறும் மற்றுமோர் உரையாடலைப் பார்ப்போம்.

අධ්‍යක්ෂ: ඔයාගේ උප්පැන්න සහතිකය තියෙනවාද?
ஒயாகே உப்பென்ன சஹதிகய தியெனவாத?
பணிப்பாளர்: உங்களுடைய பிறப்புச் சான்றிதழ் இருக்கின்றதா?

අනිල්: ඔව් මහත්මයා මෙන්න.
ஒவ் மஹத்மயா மென்ன.
அனில்: ஆம் ஐயா இந்தாருங்கள்.



අධ්‍යක්ෂ: ඔයාගේ වයස කීයද?
ஒயாகே வயச கீயத?
பணிப்பாளர்: உங்களுடைய வயது என்ன?

අනිල්: මගේ වයස අවුරුදු විසිහතරයි.
மகே வயச அவுருது விசிஹதறய்.
அனில்: என்னுடைய வயது இருபத்திநான்கு.

අධ්‍යක්ෂ: ඔයා ඉගෙන ගත්තේ කොහේද?
ஒயா இகென கத்தே கொஹேத?
பணிப்பாளர்: நீங்கள் எங்கே கல்வி கற்றீர்கள்?

අනිල්: මම මහනාම විදුහලේ ඉගෙන ගත්තේ.
மம மஹநாம விதுஹலே இகென கத்தே.
அனில்: நான் மகநாம வித்தியாலயத்தில் கல்வி கற்றேன்.

අධ්‍යක්ෂ: ඔයා සමත්වූ විභාග මොනවාද?
ஒயா சமத்வு விபாக மொனவாத?
பணிப்பாளர்: நீங்கள் சித்தியடைந்த பரீட்சைகள் எவை?

අනිල්: අ.පො.ස සා.පෙළ.
அ.பொ.ச சா.பெல
அனில்: க.பொ.த சாதாரண தரம்.

අ.පො.ස උසස් පෙළ.
அ.பொ.ச உஸஸ் பெல.
க.பொ.த உயர் தரம்.



අධ්‍යක්ෂ: ඔයා කොහේ ඉඳලද එන්නේ?
ஒயா கொஹே இந்தலத என்னே?
நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?

අනිල්: මම මීගමුවේ ඉඳල එන්නේ.
மம மீகமுவே இந்தல என்னே.
அனில்: நான் நீர்கொழும்பில் இருந்து வருகின்றேன்.

අධ්‍යක්ෂ: රැකියාව ලැබුණොත් හැමදාම ඇවිත් යන්න පුළුවන්ද?
ரெகியாவ லெபுனொத் ஹெமதாம எவித் யன்ன புலுவந்த?
பணிப்பாளர்: வேலை கிடைத்தால் ஒவ்வொரு நாளும் வந்து போகலாமா?

අනිල්: ඔව් මහත්මයා, ඇවිත් යන්න පුළුවන්.
ஒவ் மஹத்மயா, எவித் யன்ன புலுவன்.
அனில்: ஆம் ஐயா, வந்து போகலாம்.

### பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.

உதா: பிறப்புச் சான்றிதழ் இருக்கின்றதா?
උප්පැන්න සහතිකය තියෙනවාද?

i. என்னுடைய வயது இருபத்திநான்கு.
..........................................
ii. மகநாம வித்தியாலயத்தில் கல்வி கற்றேன்.
..........................................
iii. ஒவ்வொரு நாளும் வந்து போகலாம்.
..........................................






இறந்தகால தனி வாக்கியம் (Past Simple Tense) மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் (Present Simple Tense) ஆகிய இரண்டு வகை வாக்கியங்களையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

| Past Simple Tense<br>இறந்தகால தனி வாக்கியம் | Present Simple Tense<br>நிகழ்கால தனி வாக்கியம் |
|---|---|
| (அ) I went.<br>நான் சென்றேன். | (ஆ) I go.<br>நான் செல்கின்றேன். |
| (இ) You went.<br>நீ சென்றாய். | (ஈ) You go.<br>நீ செல்கின்றாய். |
| (உ) We went.<br>நாங்கள் சென்றோம். | (ஊ) We go.<br>நாங்கள் செல்கின்றோம். |
| (எ) They went.<br>அவர்கள் சென்றனர். | (ஏ) They go.<br>அவர்கள் செல்கின்றனர். |

(அ) I went to the temple last Friday.
நான் கடந்த வெள்ளிக்கிழமை கோவிலுக்குச் சென்றேன்.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஆ) I go to the temple every Friday.
நான் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கோவிலுக்குச் செல்கின்றேன்.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

---

(இ) You went to the market yesterday.
நீ நேற்று சந்தைக்குச் சென்றாய்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஈ) You go to the market everyday.
நீ ஒவ்வொரு நாளும் சந்தைக்குச் செல்கின்றாய்.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

---

(உ) We went to school yesterday.
நாங்கள் நேற்று பாடசாலைக்குச் சென்றோம்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஊ) We go to school on weekdays.
நாங்கள் வாரநாட்களில் பாடசாலைக்குச் செல்கின்றோம்.
(நிகழ்கால தனிவாக்கியம் - Present Simple Tense)

---

(எ) They went to the Office yesterday.
அவர்கள் நேற்று அலுவலகத்துக்குச் சென்றனர்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஏ) They go to the Office everyday.
அவர்கள் ஒவ்வொரு நாளும் அலுவலகத்துக்குச் செல்கின்றனர்.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

---

(ஒ) These children went to school yesterday.
இந்த சிறுவர்கள் நேற்று பாடசாலைக்குச் சென்றனர்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஓ) These children go to school on weekdays.
இந்த சிறுவர்கள் வாரநாட்களில் பாடசாலைக்குச் செல்கின்றனர்.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலாபுரம் கிராமத்தை சேர்ந்தவர்கள் முருகன்-ஆவுடைத் தாய் தம்பதி. அவர்களின் மகன் முனிசாமி. அவன் ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவன். தினமும் பாடசாலைக்கு நடந்து செல்வான்.

ஒரு நாள் மாலை பாடசாலையிலிருந்து வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அப்போது வீதியில் குளக்கரையோரம் கைப்பை ஒன்று கிடப்பதைப் பார்த்தான். திகைப்புடன் அதன் அருகே சென்றான். வீதியிலோ அல்லது வேறு எங்கேயாவது கவனிப்பாரின்றி வித்தியாசமான பொருளோ, பையோ கிடந்தால் அதைத் தொடக் கூடாது என்றும், அதில் சமுக விரோதிகள் யாரேனும் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வெடிக்கும் பொருளை வைத்திருக்கலாம் அல்லது தீங்கு விளைவிக்கும் பொருள் ஏதேனும் இருக்கலாம் என்றும், அத்னால், அது பற்றி அருகில் இருக்கும் பெரியவர்களிடம் தகவல் தெரிவிக்கவேண்டும் என்றும் ஆசிரியர் வகுப்பறையில் கூறியது அவன் நினைவுக்கு வந்தது.

அதனால், முனிசாமி தற்போது பெரியவர்கள் யாரேனும் அருகில் இருக்கிறார்களா என சுற்று முற்றும் பார்த்தான். யாரும் அருகில் இல்லாததால் நீளமான குச்சியால் அப்பையைத் தட்டிப் பாத்தான். வித்தியாசமான பொருள் ஏதும் அதில் இல்லை என்று தெரிந்து கொண்டபின்னர் அதைக் கையில் எடுத்தான். அதைத் திறந்து பார்த்தபோது ஆயிரம் ரூபா தாள்கள் நான்கு கட்டு இருப்பதைக் கண்டு திகைப் படைந்தான். அதைத் தொடு வதற்குக் கூட அவனுடைய கை கூசியது. யார் பணமோ?



## நேர்மைக்குக் கிடைத்த பரிசு

தொலைத்தவர் மனம் என்ன பாடுபடுமோ? என நினைத்து அவன் மனம் கலங்கியது. கைப்பையை எடுத்துக் கொண்டு நேராக பொலிஸ் நிலையத்துக்குச் சென்று விபரத்தை எடுத்துக்கூறி அதை அங்கு ஒப்படைத்துவிட்டுத் தன் வீட்டுக்குச் சென்றான்.

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த தொழிற்சாலையொன்றின் முதலாளியான ராதாகிருஷ்ணன் தனது தொழிற்சாலையில் பணிபுரியும் தன் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக வீதி வழியே மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, பணப்பையைத் தவறவிட்டு அதைப் பல இடங்களிலும் தேடியும் கிடைக்காமல் போனதால் அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்தில் புகார் தெரிவித்திருந்தார். இதனால், பொலிஸ் நிலைய அதிகாரி தொழிற்சாலை முதலாளி ராதாகிருஷ்ணனை வரவழைத்து நடந்த விஷயத்தை எடுத்துரைத்தார்.

அது அவருடைய பணம்தானா என்றும் அது அவருடையது என்றால் அதில் உள்ள பணம் சரியாக இருக்கிறதா என்பதையும் பார்க்கச் சொன்னார். அதற்கு அவர், அது தனது பைதான் என்றும் அதில் உள்ள பணத்தாள்களின் எண்ணிக்கை சரியாக இருப்பதாகவும் கூறினார்.

பணப்பையை ஒப்படைத்த பொலிஸ் அதிகாரிக்கு நன்றி தெரிவித்து விடைபெற்றுக் கொண்டார். மேலும், ஏழைச் சிறுவன் முனிசாமியின் நேர்மையை அறிந்த ராதாகிருஷ்ணன், அச்சிறுவனின் வீட்டிற்குச் சென்று அவனுக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டினார். அவனது நேர்மையான குணத்துக்குப் பரிசாக அவன் பாதுகாப்பாக செல்வதற்கு சைக்கிள் ஒன்று வாங்கிக் கொடுப்பதாகவும். அவனது படிப்புச் செலவுகள் அனைத்தையும் தான் ஏற்றுக்கொள்வதாகவும் அவனது பெற்றோரிடம் உறுதியளித்தார். ஊர் முழுவதும் முருகனின் மகன் முனிசாமி பற்றிய பேச்சாகவே இருந்தது. ஊர் சார்பிலும் பாடசாலை சார்பிலும் அவனுக்குப் பல பரிசுகளும் பாராட்டுகளும் கிடைத்தன. இதனால், முனிசாமியின் பெற்றோராகிய முருகனும் ஆவுடைத்தாயும் தமது மகனின் செயலால் மிகுந்த பெருமை அடைந்தனர்.

## நள்ளிரவில் மயானத்தில் கேட்ட கூச்சல்



மலியதேவவின் இறப்புக்குக் காரணம் ஓர் ஆவியின் பழிவாங்கல்தான் என்றும் அது குடும்பத்தில் அனைவரையும் பழி வாங்காமல் விடாது என்றும் பேயோட்டி ஹபு ஆரச்சி கூறியதையடுத்து அக்குடும்பத்தினர் பயந்து நடுங்கினர்.

''இதற்குப் பரிகாரம் பலி கொடுக்க வேண்டும். புலால் உண்ணாமல் வாவியில் தலைமுழுகவேண்டும். மதவழிபாட்டுத்தலத்துக்கு காணிக்கை செலுத்துவதோடு, பசித்தவர் பத்துப் பேருக்கு அன்னதானமும் வழங்கவேண்டும்'' என்றும் ஹபு ஆரச்சி கூறினார்.

உடனே மலியதேவனின் மகன் தனபால இடையில் குறுக்கிட்டு ''அந்த அளவு செலவழிக்க இப்போது எங்களிடம் வசதி இல்லையே'' என்றான்.

''அப்படியானால் செய்வதற்கு ஒரு வழியும் இல்லை. உடனடியாக நான் சொன்னபடி செய்தாகவேண்டும். இன்றேல், இன்னும் மூன்று நாட்களுக்குள் உங்கள் வீட்டில் இன்னுமொருவர் கொல்லப்படலாம்'' என ஹபு ஆரச்சி கூறினார். அதைக்கேட்டதும் மலியதேவவின் மகள் டிங்கிரி மெனிக்கேயின் உடலெல்லாம் நடுங்கியது. அவள் அழுதுகொண்டே ''அம்மா நமது வீட்டை மட்டும் வைத்துக்கொண்டு பக்கத்திலுள்ள காணித்துண்டை விற்றேனும் அந்த ஆவியை விரட்டுவோம்'' என்றாள்.

''விற்றால் இதுபோல் இன்னொரு காணியை வாங்கமுடியாது. எனவே ஈடு வைப்போம். முதலோடு சிறிது சிறிதாக வட்டியையும் கட்டி மீட்டுக் கொள்ளலாம்'' என்றான் தாய்மாமன் நந்தபால. அதற்கு சிற்றப்பன் வன்னிசேன ''மலியதேவவே இறந்துபோனபின் வட்டியையும் முதலையும் கட்டுவது யார்?'' என்றான். அந்தப் பொறுப்பு தனது தலையில் விழும் என்று அவனுக்கொரு பயம். முடிவில் கிடைத்த விலைக்குக் காணி விற்கப்பட்டு சடங்குகள் நிகழ்ந்தன. இதனால் அக்குடும்பம் நடுத்தெருவுக்கு வந்துவிட்டது.

> **“அதோ அதோ என்னை ஓர் கறுப்பு உருவம் அழைக்கிறது” என்று வெதமுனி கூறியதை அடுத்து குடும்பத்தினர் அச்சமுற்றனர்**

இரண்டு நாட்கள் கழித்து பக்கத்து வீட்டு வெதமுனி இரவில் பரக்கப்பரக்க விழித்துக்கொண்டிருந்தான். ஏதேதோ பிதற்றிப் பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டிருந்தான். ஊ... ஊ.... என்று ஊளையிட்டவாறே அனைவரையும் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். வீடு முழுக்க ஆட்கள் நிரம்பியிருந்த போதும் அவன் எவருமற்ற ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டி ''அதோ அதோ ஒரு கறுப்பு உருவம் என்னை வா வா என்று அழைக்கிறது'' என்றான்.

அவனது உடல் காய்ச்சலால் கொதித்தது. இதனால், ஜன்னி கண்டு பிதற்றுவதாக அங்கிருந்த பரமுத்தி கூறினான். அதைக் கேட்டதும் வெலிஅமுன எழுந்து வெதராஜ பண்டுகாப வைத்தியரை அழைத்து வருவதாகக்கூறிக் கிளம்பினான். சிறிது நேரத்தில் அந்த வைத்தியர் வந்து வெதமுனியின் இரண்டு கண்களையும் விரித்துப் பார்த்தார். நாடி நரம்புகளைக் கூர்ந்து பார்த்துப் பரிசோதித்தார். கைகளை நீட்டச் சொல்லி அவை நடுங்குகின்றனவா என்று ஆராய்ந்தார். கைகால்களை நீட்டி மடக்கச் சொன்னார். தமது உள்ளங்கையால் வயிற்றைப் பிசைந்து பார்த்தார். பின்னர் சுற்றுமுற்றும் நோக்கிவிட்டு வெதமுனிக்கு எந்த நோயும் இல்லை என்று உறுதிபடக்கூறினார். அத்தோடு, பரிசோதனைக்கு மட்டும் எனக்கூறி பணத்தைப் பெற்றுக்கொண்டு கிளம்பினார்.

''என்ன வெதமுனிக்கு எந்த




நோயும் இல்லையா? அப்படியானால் இதுவும் ஓர் ஆவியின் சேஷ்டையாகத்தான் இருக்கும்'' என்றான் பரமுத்தி. அவனுக்கு எப்போதும் பேய், பிசாசு, ஆவி, பில்லிசூனியம், கண்திருஷ்டி என்பனவற்றில் அதிக நம்பிக்கை இருந்தது. அதற்கு ஒத்து ஊதுவது போல் வெலிஅமுன, ''நானும் நினைத்தேன் ஒன்றும் இல்லையென்றால் எப்படிச் சும்மாவா நோய் வந்தது. நோய்க்கும் பார்க்கவேண்டும். பேய்க்கும் பார்க்க வேண்டும்'' என்றான்.

அதைக் கேட்டதும் வெதமுனியின் மனைவி சந்தமாலி விக்கித்து விரக்தியுற்று ''என்ன செலவானாலும் பரவாயில்லை'' என்று கூறி அழுதவளாக காது, கழுத்து, விரல் ஆகியவற்றில் இருந்தவையோடு பெட்டகத்திலிருந்த நகைகளையும் கொண்டு வந்து முன்னால் வைத்தாள். அதற்கான முழுப்பொறுப்பும் பரமுத்தியுடம் கொடுக்கப்பட்டது. அதன்படி அடுத்தநாள் காலை பேயோட்டி பானபொக்க அழைத்து வரப்பட்டார்.

அவரது உடுக்கை ஒலி முழு வீட்டையும் அதிர வைத்தது. சீடன் பலிஹக்கார பேய் முகம் போட்டு ஆடினான். கறுப்பு நிற நீளமான அங்கியுடன் கால்களிலும் கைகளிலும் நீண்ட நகங்களுடனான உறைகளை அணிந்து கொண்டு ஆடுகையில் அவன் பிசாசு போலவே இருந்தான்.

அதைக்கண்டதும் அங்கு கூடியிருந்தோர் அனைவரும் நிலை குலைந்து உடல் பதறி நடுநடுங்கி அச்சத்தால் துடிதுடித்தனர். அந்த அளவுக்கு அவன் பாய்ந்து பாய்ந்து ஆடினான். மந்திரமொன்றை பேயோட்டி ஜெபித்தான். இது என்ன மொழி? பாளியா? சமஸ்கிருதமா? இரண்டையும் சாராத மொழியை எங்கிருந்துதான் அவன் கற்றானோ? ''உன்னை ஒழிப்பேன். மண்ணில் புதைப்பேன். ஓய்ந்து ஒடுங்கி விலகிப்போ. எச்சில்பிசாசே ஓடிப்போ'' என்று பாடினான்.

உயிருள்ள கோழியொன்றின் கழுத்தைப் பேய் வேடம் போட்ட சீடன் பலிஹக்கார கடித்துக்கொண்டு வேகமாக ஆடியாடிக் கத்திக்கொண்டு சுற்றிச் சுழன்று கீழே விழுந்தான். புகையாலும் பிரம்படிகளாலும் நெருப்பு ஊதலாலும் வியர்த்து விறுவிறுத்து திக்குமுக்காடிய பலிஹக்கார ஒரே ஓட்டமாக விழுந்தடித்துக்கொண்டு வெளியே பாய்ந்து ஓடினான். பின்னர் வெதமுனியின் முகம் பிரகாசித்தது. அவனுக்கு குங்குமத்தால் திலகமிட்டு அவன் முகத்தில் பேயோட்டி பானபொக்க மஞ்சள் தெளித்தான். அத்தோடு, பேய்க்கு வைத்த பொரித்த கோழிகள், அவித்த முட்டைகள், வறுத்த மீன்கள் மற்றும் ஒரு தொகைப் பணத்தையும் பெற்றுக்கொண்டு கிளம்பினான்.

எனினும், அன்று நள்ளிரவில் வெதமுனி படுக்கையில் காணப்படவில்லை. மனைவி சந்தமாலி பதறிக் கொண்டு வீடு முழுக்கச் சுற்றிப்பார்த்தும் பயனில்லை. அப்போது பக்கத்திலிருந்த மயானத்திலிருந்து பலத்த கூச்சல் ஒன்று கேட்டது. அவள் பதுங்கிப் பதுங்கிச் சென்று உற்றுப் பார்த்தபோது கணவன் வெதமுனி ஒரு புதைகுழியின் மேல் அமர்ந்திருந்தது தெரிந்தது. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை - இந்திய அணிகள் இலங்கையில் போட்டியிடும் வாய்ப்பு?

இலங்கை-இந்தியா அணிகளுக்கிடையே மூன்று டெஸ்ட் போட்டித்தொடரொன்றையும் இந்தியாவும் உள்ளடங்கும் வகையிலான முக்கோண போட்டித் தொடரொன்றையும் இலங்கையில் நடத்துவதற்கான ஏது நிலைகள் குறித்து இந்திய-இலங்கை கிரிக்கெட் சபைகள் கலந்துரையாடி வருகின்றன.

இந்த வருடத்திற்கான கால அட்டவணையின்படி இலங்கை அணிக்கு இரண்டு டெஸ்ட்போட்டிகளில் மட்டுமே கலந்து கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதுவும் நொவெம்பர் மாதம்தான் இந்தப் போட்டிகள் நடைபெறும். அவ்வாறே, ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறவுள்ள 'டுவென்டி டுவென்டி உலகக் கிண்ணப்போட்டிகளின் பின்னர் இலங்கை அணிக்கு எவ்வித போட்டிகளும் கிடையாது.

இதேபோல், இந்திய அணிக்கும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்காவுடன் நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டிகளின் பின்னர், வருட இறுதிவரை எந்தவொரு டெஸ்ட் போட்டிகளும் கிடையாது. எனவே, இலங்கை-இந்திய கிரிக்கெட் அணிகள் இந்த இடைப்பட்ட காலத்தில் போட்டிகள் எதுவுமின்றி வெறுமனே இருக்கவுள்ளமையினால் இது விடயமாக இரண்டு நாடுகளினதும் கிரிக்கெட் சபையினர் கலந்துரையாடி வருகின்றனர்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் டெஸ்ட் தரப்பட்டியலில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளபோதிலும் அதனை நீண்ட காலத்திற்கு தக்க வைத்துக்கொள்வதற்கான சாத்தியங்கள் கிடையாது என்று விமர்சகர்கள் தெரிவித்து வருகின்ற நிலையில், புதிய திட்டத்தின்படி இலங்கையில் மேலும் சில போட்டிகளில் இந்திய அணியை கலந்து கொள்ளச் செய்வதன் மூலம் தரப்பட்டியலின் முதலாம் நிலையை தக்க வைத்துக்கொள்வதற்கான வாய்ப்புக் கிட்டலாம் என்று இந்திய கிரிக்கெட் சபை கருதுவதால், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள அவர்கள் முற்படுவர் என்றும் குறிப்பிடப்படுகின்றது.



# டில்ஷானின் சாதனை

இலங்கை கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திலகரட்ண டில்ஷான் கடந்த வருடத்தில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் 1000 (ஆயிரம்) ஓட்டங்களைக் கடந்த உலகின் ஒரே வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

கடந்த வருடம் டில்ஷான் 11 டெஸ்ட் போட்டிகளில் 1097 ஓட்டங்களையும், 19 ஒருநாள் போட்டிகளில் 1000 ஓட்டங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவர் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் என இரண்டு போட்டிகளிலும் 10 சதங்களையும் 8 அரைச்சதங்களையும் பெற்றுள்ளார். வருடமொன்றிற்குள் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர்களின் பட்டியலில் டில்ஷான் 6 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். ரிக்கிபொன்டிங் இதில் முதலாவது இடத்தை வகிக்கின்றார். பிறந்துள்ள வருடத்தில் திலகரட்ண டில்ஷான் இன்னும் பல சாதனைகளை நிகழ்த்துவார் என்று விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

# ஐ.பி.எல் ஏலம் மீண்டும் ஆரம்பம்

மூன்றாவது தடவையாகவும் நடைபெறவுள்ள ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளதையிட்டு, போட்டியாளர்களை ஏலம் விடல் தற்போது நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏலத்தில் இலங்கை அணியின் புதிய வீரர்கள் 16 பேரும் ஏலம் விடப்பட்டுள்ளனர். மாலிங்க பண்டார, இந்திக்க டி சேரம், சின்தக்க, கன்டம்பி, நுவல்குலசேக்கர, சுரங்க லக்மால், முபாரக், திஸர பெரேரா, தம்மிக்க பிரசாத், புஷ்பகுமார, சுராஜ் ரன்திவு, ரங்கன ஹேரத், கிஹான் ரூபசிங்ஹ, உப்புல் தரங்க, வெலகெதர, கௌஷல்ய வீரரத்ன ஆகியோரே அந்தப் புதிய வீரர்களாவர். இவர்களுடன் இலங்கை தேசிய அணியின் சிரேஷ்ட வீரர்கள் 12 பேரும் இப்போட்டிகளில் பங்கு பற்றுவர்.



# மீண்டும் களத்தில்...

மகளிர் கொல்ஃப் தரப்படுத்தல் பட்டியலில் முதலாவது இடத்தில் உள்ள மெக்ஸிக்கோவின் லொரினா ஒக்சோயா, பிறந்துள்ள புது வருடத்திலும் தனது இடத்தை தக்கவைக்கும் நோக்கில் மீண்டும் போட்டிக்களம் இறங்கியுள்ளார்.

கடந்த 2009 ஆம் வருடத்தில் எந்தவொரு முன்னிலைப் போட்டிகளிலும் இவரால் வெற்றி பெற முடியாதபோதிலும், முதல்தர வீராங்கனை என்ற பட்டம் இன்னும் அவர் வசமே உள்ளது. கடந்த வருடத்தில் ஸ்கொட்லாந்தின் கெட்லோனா மெத்யூஸ் மற்றும் தென்கொரியாவின் ஜியெய் ஷின்க் ஆகியோர் இவருக்கு பாரிய சவாலாக இருந்தனர்.

பிறந்துள்ள வருடத்தில் முன்னிலை போட்டித்தொடரொன்றை வெற்றிகொள்வதே தனது இலக்காகும் என்று குறிப்பிடுகின்ற லொரினா 2008 ஆம் ஆண்டில் உலகின் முன்னணி கொல்ஃப் போட்டிகள் பலவற்றில் வெற்றியீட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 'ஐ.பி.எல்' போன்று

# பாகிஸ்தானிலும் 'பி.பி.எல்?'

ஐ.பி.எல் (இந்தியன் பிரீமியர் லீக்) கிரிக்கெட் போட்டிகளைப் போல் பாகிஸ்தானிலும் பி.பி.எல் (பாகிஸ்தான் பிரீமியர் லீக்) என்ற பெயரில் போட்டிகளை நடத்தினால் பாகிஸ்தான் கிரிக்கெட் துறையை வளர்ச்சி நிலைக்கு கொண்டு செல்லமுடியும் என்று பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ரமீஸ் ராஜா அழைப்பு விடுத்துள்ளார்.




இதுகுறித்து அவர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், ஐ.பி.எல்லைப் போல் பிரமாண்டமானதாக இல்லாவிட்டாலும் இலங்கை, பங்களாதேஷ், கென்யா, சிம்பாப்வே ஆகிய நாடுகளிலிருந்து வீரர்களை இந்த 'பி.பி.எல்' போட்டிகளில் பங்குபெறச் செய்யமுடியும் என்றும், இதற்கு பாகிஸ்தான் ரசிகர்களின் வரவேற்புக் கிடைக்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தற்போது பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக பாகிஸ்தானின் கிரிக்கெட் துறை பின்னடைவு நிலைக்கு ஆளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சார்க் 20/20 அணி தெரிவு

பங்களாதேஷில் இந்த மாதம் (ஜனவரி) இறுதியில் நடைபெறுகின்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் முதல் தடவையாக இடம்பெறவுள்ள 'டுவென்டி டுவென்டி' கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக இலங்கை அணி தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள இலங்கை அணிக்கு அஷான் பிரியஞ்ஜன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் சர்வதேச மட்டத்திலான போட்டிகள் பலவற்றில் கலந்துகொண்ட அனுபவத்தைப் பெற்றவராவார்.

அணியின் உபதலைவராக தினேஷ் சந்திமால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தற்போதைய இலங்கை தேசிய அணியில் இடம்பெற்றுள்ள வீரராவார்.

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளச்செல்லவுள்ள இந்த அணியினர் தற்போது பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்


நாவலப்பிட்டி கதிரேசன் இ.ம.கல்லூரியைச் சேர்ந்த எஸ்.பிரேங்லின், 154 புள்ளிகளைப் பெற்றுள் ளார்.


விபுலானந்தாக் கல்லூரி மாணவன் வி.லிந்துஜன், 161 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், விமலநாதன்-கவிதா தம்பதியரின் புதல்வராவார்.


வி.லதுசன், 140 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கமு/கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவராவார்.


கஹடோவிட அல்-பத்ரியா ம.வித்தியாலய மாணவனான எம்.அல்தாப், 165 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஏ.அல்வான்-ரிஸ்வானா பேகம் ஆகியோரின் புதல்வராவார்.


எஸ்.லுவாரகன், 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நாவலப்பிட்டி கதிரேசன் இ.ம.கல்லூரி மாணவராவார்.


ஓட்டமாவடி தே.பாடசாலையைச் சேர்ந்த ஏ.நிராஸ், 144 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அப்துல் நாசர்-பதுறுன்னிஸா தம்பதியரின் புதல்வராவார்.


க/பாத்திமா மு.பா.ம.வித்தியாலய மாணவி எஃப்.ஹஸ்னா, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஹாரிஸ்-ஹலீமா தம்பதியரின் புதல்வியாவார்.


கமு/பாண்டிருப்பு நாவலர் வித்தியாலய மாணவன் க.பிரவீந்திரா, 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.


முறுதகஹமுல பாத்திமா மு.ம.கல்லூரி யில் கல்வி பயிலும் எஃப்.அஸ்பா, 155 புள்ளிகளைப் பெற்றுள் ளார். இவர், அன்ஸார்-ஜெசீலா தம்பதியரின் புதல்வியாவார்.


அரீப் அஹமட், 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், க/ஜப்பார் ம.கல்லூரி மாணவராவார்.


அநு/ஸாஹிரா தே.பாடசாலையில் கல்வி கற்கும் எஃப்.டில்ஷா, 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எச்.அக்பர்-ஏ.றெஹானா தம்பதியரின் புதல்வியாவார்.


மாவ/நூராணியா மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எஃப்.சுஹதா, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஏ.கஃப்ஃபார்-எஸ்.நிஸா தம்பதியரின் புதல்வியாவார்.


வளஹேன மு.வித்தியால யத்தைச் சேர்ந்த எம்.சியாத், 146 புள்ளிகளைப் பெற்றுள் ளார். இவர், ஐ.இல்யாஸ்-மசாஹிமா தம்பதியரின் புதல்வராவார்.


கே/உந்துகொடை த.க.வித்தியாலய மாணவி எஃப்.அகீலா, 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.நஸீர்-ஹம்ஸியா தம்பதியரின் புதல்வியாவார்.


இ/எம்பி/அஸ்ஸலாம் மு.ம.வித்தியாலய மாணவி பாஹிரா பேகம், 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பாரூக்-ஹலீமா தம்பதியரின் புதல்வியாவார்.


மாவ/நூராணியா மு.ம. வித்தியாலய மாணவி என்.ஹப்ஸா, 141 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.நௌபல்-ஜெ.ஹைரியா தம்பதியரின் புதல்வியாவார்.


க/பாத்திமா பா.மு.ம. வித்தியாலயத்தைச் சேர்ந்த எஃப்.மின்ஹா, 142 புள்ளிகளைப் பெற்றுள் ளார்.


ச.ஹம்ஷாலினி, 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கமு/கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவியாவார்.


கொட்டகலை த.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பொணி பெனகஸ், 161 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கருணானந்தன்-ரோஸ்மேரி தம்பதியரின் புதல்வராவார்.


க/திரித்துவக் கல்லூரியில் கல்வி பயிலும் ஆர்.அபிலாஸ், 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரெங்கநாதன்-ராஜேஸ்வரி தம்பதியரின் புதல்வராவார்.


விஜய்

# கடற்கரைக் காட்சி - அகில இலங்கை சித்திரப் போட்டி - 2010



அன்பு பிள்ளைகளே,

கடந்த வருடங்களைப் போலவே இம்முறையும் 'கடற்கரைக் காட்சி' எனும் தலைப்பிலான சித்திரப் போட்டியை அகில இலங்கை ரீதியில் நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளோம். கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம் இப்போட்டியை நடத்துகின்றது.

கடற்கரையோரக் காட்சியொன்றை நீங்கள் நேரில் தரிசித்து கண்ட காட்சியாக சித்திரமொன்றை வரைந்து அனுப்பவேண்டும். முட்டையிடுவதற்காக கடற்கரைக்கு வருகின்ற கடல் ஆமைகள், ஆழமற்ற கடற் பகுதிகளில் முருகைக்கற்கள் காணப்படுதல் ஆகியன உள்ளடங்கிய கடற்கரையோர சுவாத்தியத்தை வெளிப்படுத்தும் எந்தவொரு காட்சியையும் சித்திரமாக வரைந்து அனுப்பலாம்.

## போட்டி விதிமுறைகள்

- ★ ஒருவர் ஒரு சித்திரத்தை மாத்திரமே அனுப்ப முடியும்.
- ★ சித்திரத்தின் அளவு 35 செ.மீற்றர்X45 செ.மீற்றர் அளவில் இருத்தல் வேண்டும்.
- ★ எந்தவொரு வர்ணப் பூச்சையும் பயன்படுத்தலாம்.
- ★ ஏற்றுக் கொள்ளப்பட்ட நடுவர் குழுவொன்றினால் பரிசுக்குரிய சித்திரங்கள் தெரிவு செய்யப்படுவதுடன், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகவும் அமையும்.
- ★ சித்திரம் வரையப்படும் தாளின் பின்புறத்தில் போட்டியாளரின் பெயர், வீட்டு முகவரி, பிறந்த தினம், பாடசாலை, பாடசாலை முகவரி, போட்டிப் பிரிவு ஆகியனவும் குறிப்பிடப்படல் வேண்டும்.
- ★ போட்டிக்கு அனுப்பப்படும் சித்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி ஒப்படைக்கப்பட மாட்டாது.
- ★ போட்டி முடிவுகள் 'விஜய்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

## சித்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

'கடற்கரைக் காட்சி' அகில இலங்கை சித்திரப் போட்டி - 2010
கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம்,
இல-11, பெரேரா மாவத்தை,
மடகும்புர, பாணந்துறை.

## போட்டி முடிவு: 2010 பெப்ரவரி 28 ஆம் திகதி

மேலதிக விபரங்களுக்கு 077-9317619 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும். வெற்றியீட்டப்படும் சித்திரங்களின் உரிமை கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு உரித்துடையதே.

### பரிசளிப்பு விழா

பரிசளிப்பு விழா மார்ச் மாதத்தில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் கொழும்பில் நடைபெறும்.

### பங்குபற்றக்கூடியோர்

பாலர் வகுப்பு மாணவர்கள்.
ஆரம்பப் பிரிவு 6 ஆம் ஆண்டிற்கு கீழுள்ள மாணவர்கள்.
கனிஷ்ட பிரிவு - 7, 8, 9, 10 ஆம் ஆண்டு மாணவர்கள்.
சிரேஷ்ட பிரிவு - 11, 12, 13 ஆம் ஆண்டு பிரிவு மாணவர்கள்.

### பரிசு விபரம்

அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பணப்பரிசு வழங்கப்படும்.

| பாலர் பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 3,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 2,500.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 2,000.00 |

| ஆரம்பப் பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 5,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 3,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 2,000.00 |

| கனிஷ்ட பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 7,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 5,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 3,000.00 |

| சிரேஷ்ட பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 10,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 7,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 5,000.00 |

சான்றிதழ்: ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்படும் சிறந்த சித்திரங்களை வரைந்த நூறு பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா? 3

a) தென்மேற்கு ஐரோப்பாவிலுள்ள ஒரு நாடு. வடக்கில் சுவிற்சர்லாந்து, ஒஸ்ட்ரியா போன்ற நாடுகளும் கிழக்கில் எட்ரியடிக் கடலும் தெற்கில் மத்திய தரைக்கடலும் மேற்கில் டிரேனியன் கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன. இங்கு நாடாளுமன்றக் குடியரசு ஆட்சி நிலவுகின்றது. சில்வியோ பெர்லுஸ்கோனி, நாட்டின் பிரதமராகப் பதவி வகிக்கின்றார். இந்த நாட்டின் பெயரின் கீழ்க் கோடிடுக.



*(பிரான்ஸ்/இத்தாலி/ஸ்லோவேனியா)*

b)



மத்திய அமெரிக்காவிலுள்ள ஒரு நாடு. சான் சல்வடோர், இந்த நாட்டின் தலைநகரமாகும். இங்கு குடியரசாட்சி நிலவுகின்றது. நாட்டின் ஜனாதிபதியாக மொரிஸியோ ஃபியுன்ஸ் திகழ்கின்றார். குவாதமாலா, ஹொன்டூராஸ் ஆகிய நாடுகளுக்கிடையில் வட பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளது. இந்த நாடு என்ன பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றது?

*எல் சல்வடோர்/நிகரகுவா/மெக்ஸிகோ)*


## அறிவுக்கு விருந்து 242 விடைகள்

போட்டி: 02

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | T | | | F | | | | | | |
| | P | U | D | D | L | E | S | | U | | |
| | | L | | | O | | P | | M | | |
| R | A | I | N | | W | | R | O | B | I | N |
| | | P | | | E | | I | | R | | |
| | | S | | | R | | N | | E | | |
| | | | | | S | | G | | L | | |
| | | | | | | | | | L | | |
| | | | | | | | | | A | | |


போட்டி: 03
1) 2 ஆவது படம்
2) 1 ஆவது படம்
3) 2 ஆவது படம்
4) 2 ஆவது படம்
5) 1 ஆவது படம்
6) 1 ஆவது படம்


போட்டி: 04



போட்டி: 05
1. ஜப்பான் நாட்டு மயில்கள் சிவப்பாக முட்டையிடும்.
2. யானையின் துதிக்கையில் நான்கு லட்சம் தசைகள் உள்ளன.
3. நெற்பயிரை முதலில் பயிர் செய்தவர்கள் சிந்து சமவெளி மக்கள் ஆவர்.
4. சிப்பியில் முத்து விளைய பதினைந்து ஆண்டுகள் எடுக்கும்.
5. வருமான வரி இல்லாத நாடு குவைத் ஆகும்.

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக





1

### அற்லஸ் அறிவுக்கு விருந்து 242 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஆகிப் ஸைத், தரம் - 3,
அல்-பதுரியா ம.வித்.,
கஹடோவிட.

**போட்டி: 02**
எஃப்.ரிஃப்கா, தரம் - 7,
அல்-இக்பால் ம.வித்.,
கொழும்பு-02.

**போட்டி: 03**
மா.நாகதர்சிகன், தரம் - 3,
திருநாவுக்கரசு ம.வித்.,
வட்டுக்கோட்டை.

**போட்டி: 04**
ஏ.சுஜித், தரம் - 7,
றோ.க.த.வித்., வத்தளை.

**போட்டி: 05**
சு.சோபியா, தரம் - 13(வர்த்தகம்),
யா/சண்.இந்துக் கல்.,
சங்கானை.

### பாராட்டுப் பெறுவோர்

- எம்.ஏ.முஹம்மத், தரம் - 10, மொ/பி.கனுல்வெல மு.வித்., பிபிலை.
- எம்.அம்மார் சியாட், கன்னத்தோட்டை.
- ரா.திருத்திரிகா, தபாற் கந்தோர் வீதி, மஸ்கெலியா.
- பி.செரினா, தரம் -1B, பண்டாரவளை ம.கல்., பண்டாரவளை.
- ஆர்.றிஸ்மா பானூன், தி/அல்-அஸ்ஹர் மு.ம.வித்., திருகோணமலை.
- எஃப்.இஷ்ஃபா, தரம் - 6B, மாறை/அரபா தே.பாட., வெலிகம.
- அ.முஹம்மட், தரம் - 5A, தி/கோணேஸ்வரா இ.கல்., திருகோணமலை.
- எஃப்.சுமையா, பதியுதீன் மஹ்மூத் பெ.கல்., கண்டி.
- பி.சஹானா வெலன்டைன், தரம் - 8, கஹவத்தை நவோத்யா த.ம.வித்., கஹவத்தை.
- ஆர்.விதுர்ஷா, ஜயந்தி வீதி, கெகிராவை.




**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.02.03 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 245**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

### இணைக்க 2



- book
- calculator
- pen
- binder
- notebook
- pencil case
- pencil sharpener
- map
- glue
- backpack/schoolbag
- pencil
- paperclips
- crayons
- eraser
- scissors
- ruler




## கணக்குப் புதிர் 5

சுப்புவின் சகோதரர்களின் எண்ணிக்கையும் சகோதரிகளின் எண்ணிக்கையும் ஒன்றே. கமலாவின் சகோதரர்களின் (சுப்புவும் அவர்களில் ஒருவன்) எண்ணிக்கையோ அவளது சகோதரிகளின் எண்ணிக்கையின் இரண்டு மடங்கு. ஆகவே;

- சுப்புவின் சகோதரிகள் எத்தனை பேர்? ..................................
- கமலாவின் சகோதரர்கள் எத்தனை பேர்? ..................................
- இருவரும் உள்ளடங்கலாக மொத்தம் எத்தனை பேர்? ...............

4




நீங்கள் விரும்பும் நிறங்களால் ஒவ்வொரு பலூனையும் நிறந்தீட்டி, அதனை ஆதாரமாகக் கொண்டு அருகிலுள்ள இடைவெளிகளை நிரப்புக

1. Balloon number one is ________.
2. Balloon number two is ________.
3. Balloon number three is ________.
4. Balloon number four is ________.
5. Balloon number five is ________.
6. Balloon number six is ________.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆம் நூற்றாண்டு கடல் தெய்வம்





சீனாவில் 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெண், கடல் தெய்வமாக இன்றும் தம்மைக் காத்து வருவதாக நம்பி அவருக்கு ஆலயம் அமைத்து வழிபட்டு வருகிறார்கள் ஒரு பகுதி மக்கள். இந்தக் கடல் தெய்வத்தின் ஆலயம் 'குவாண்டு' ஆலயம் என்று அழைக்கப்படுகின்றது. மிகப் பழைமைமிக்க ஆலயங்களில் ஒன்றும் பிரபல்யமானதுமான இந்த ஆலயம் தாய்வானில் அமைந்துள்ளது.

மா-ட்ஸ் (Ma-tsz) என்னும் இந்தப் பெண் வாழ்ந்த காலத்தில் நோயுற்ற மக்களைக் குணப்படுத்தும் விசேட சக்தியைப் பெற்றிருந்தாராம். புயல், வெள்ளம் மற்றும் இயற்கை அனர்த்தங்களிலிருந்து மக்களை பாதுகாக்கும் இவர், குவான்-இன் (Kuan-Yin) என்னும் தெய்வத்தின்





அவதாரம் என்று மக்கள் நம்புகின்றனர். 10 ஆம் நூற்றாண்டில் தனது 28 ஆவது வயதில் முத்தியடைந்த இவரை இன்றும் அனர்த்தங்கள் ஏற்படும்போது நினைத்து வழிபட்டால் பல இடங்களிலும் தோன்றி மக்களைப் பாதுகாப்பார் என நம்பப்படுகிறது.

சீனாவிலும் தாய்வானிலும் வாழும் மக்கள் கடந்த ஆயிரம் வருடங்களுக்கும் மேலாக இவரை வழிபட்டு வருகின்றனர். கடல் தெய்வமென நம்பப்படும் இவருக்காக 17 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட 'குவாண்டு' ஆலயம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. நவீனமாகக் காணப்படும் இவ்வாலயம் 'தன் சுய் நதி' என்னும் தூய நீர் நதிக்கு (Fresh Water River) அருகில் அமைந்துள்ளது. கருணை உள்ளமுடைய பௌத்த பெண் தெய்வமான குவான் இன் தெய்வத்தை வழிபடும் ஆலயமொன்றும் இந்தக் 'குவாண்டு' ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ளது. இந்த குவான் இன் தெய்வம் ஆயிரம் கரங்களும் கண்களும் உடையதென்றும் நம்புகின்றனர்.

'குவாண்டு' ஆலயத்துக்குள் அழகாகச் செதுக்கப்பட்ட நாக வடிவிலான தூண்கள், கற்சிங்கங்கள், சுவர் சிற்பங்கள் என்பன காணப்படுகின்றன. கதவுகளிலும் தெய்வ சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பிரதான மண்டபத்துக்குள் மாட்ஸ் தெய்வம் அமர்ந்திருப்பது போன்ற சிலையொன்று உள்ளது. 'குவாண்டு' ஆலயத்தின் வலது பக்கத்தில் 80 மீற்றர் உயரமான பௌத்த குகை (Buddha Cave) எனப்படும் குகை ஒன்று அமைந்துள்ளது. இதன் வாயிலில் பீரங்கி போன்ற அடையாளம் ஒன்று காணப்படுகின்றது. இது அனைத்து தோஷங்களையும் விரட்டுவதாக நம்புகின்றனர். குகையின் இரண்டு பக்கங்களிலும் வரிசையாக தேவர்களின் சிலைகள் காணப்படுகின்றன. பிற்பகுதியில் கருணைத் தெய்வம் குவான் இன் சிலை காணப்படுகிறது. ஆலயத்துக்கு வெளியில் உணவு, சிற்றுண்டி, குளிர்பானம் பூஜைப் பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் உள்ளன. இந்த 'குவாண்டு' ஆலயம் தைப்பே நகரின் பெய்ட்டு மாவட்டத்தில் அமைந்துள்ளது.



# பழைமை மிக்க சுவர் ஓவியம்



உலகின் மிகப்பழைமை மிக்கது என நம்பப்படும் சுவர் ஓவியம் ஒன்று வடசிரியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுமார் 11,000 வருடங்கள் பழைமைமிக்க இந்த சுவர் ஓவியம் பூமிக்கு அடியிலேயே கண்டுபிடிக்கப்பட்டது.

இரண்டு சதுரமீற்றர் அளவிலான இந்த ஓவியம் சிவப்பு, கறுப்பு, வெள்ளை நிறங்களில் வரையப்பட்டுள்ளது. இது ஒரு நவீன ஓவியம் போல் காணப்படுவதாக பலரும் கூறுகின்றனராம். விஞ்ஞான ஆராய்ச்சிக்கான பிரான்சின் தேசிய நிலைய ஆய்வாளர் ஒருவர் இந்த ஓவியத்துக்கு அடுத்து இன்னொரு சுவர் ஓவியம் காணப்படுவதாகக் கூறினார். இந்த ஓவியம் அலெப்போஸ் (Aleppo's Museum) அருங்காட்சியகத்தில் வைக்கப்பட இருப்பதாகவும் அவர் கூறினார்.

துருக்கியில் ஏற்கனவே கண்டு பிடிக்கப்பட்ட ஓவியமே மிகப் பழைமையானது என்று முன்னர் நம்பப்பட்டது என்றும் அது 1500 வருட கால பழைமையானது என்று தெரியவந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த ஓவியம் கண்டுபிடிக்கப்பட்ட ஜேட் அல்-முகரா பகுதியில் வாழ்பவர்கள் நவீன காலத்தவர்கள் போல் காணப்பட்டாலும் பழங்குடியினராகவே இருக்கின்றனராம்.

# வேதனைகளே சாதனைகளாகின



உலகப் புகழ்பெற்ற கவிஞர் ஜோன் மில்டன் (1608-1674) இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். ஒரு வியாதியால் கண் பார்வையை இழந்துவிட்ட நிலையிலும் அவர் அமரத்துவமான ஆங்கிலக் கவிதைகளை எழுதினார்.

ஆங்கில இலக்கியத்தில் அவரது கவிதைகள் இன்றும் பெரிய பொக்கிஷமாகப் போற்றப்படுகின்றன. ஒரு சமயம் அவரது நண்பர் ஒருவர் அவரிடம், "உங்கள் குடும்ப வாழ்க்கை பற்றி சில விபரங்களைக் கூற முடியுமா?" என்று கேட்டார். அதற்கு மில்டன், "என்னுடைய படைப்புக்களே உங்களுக்குத் தேவையான விபரங்களைத் தரும் என்று கருதுகிறேன்.

இருந்தாலும் சில விஷயங்களை சொல்கிறேன். எனக்குத் திருமணமாகி என் மனைவி வீட்டுக்கு வந்த பின், நான் எழுதிய நூலின் பெயர் 'இழந்த சொர்க்கம்'. என் மனைவி இறந்து நான் தனி மனிதனாகி விட்ட பிறகு நான் எழுதிய நூலின் பெயர் 'திரும்பப் பெற்ற சொர்க்கம்' என்றார்.

மனைவி சரியில்லாததால் அவர் அடைந்த துன்பம் எத்தகையது என்பதை உணர்ந்த அவரது நண்பர் மனம் வருந்தினார். இருந்தாலும் அந்த வேதனைகளையே சாதனையாக மாற்றிவிட்ட அவரது திறமையை என்னவென்று சொல்வது?


## விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | - ரூபா 390/= | 6 மாதத்திற்கு | - ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | - ரூபா 780/= | 1 வருடத்திற்கு | - ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ..................................
..................................
முகவரி - ..................................
..................................
தொ.பேசி - ..................................
பத்திரிகையின் பெயர் - ..............................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)
..................................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:
**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயமாக மறைந்த கடற்சிங்கங்கள்

அமெரிக்காவின் சென் ஃபிரான்ஸிஸ்கோ பகுதியிலுள்ள 39 ஆம் இலக்கத் துறைமுகப் பகுதியானது மக்களின் கவனத்தை ஈர்த்த ஒரு பகுதியாகும். உள்நாட்டவர்கள் மட்டுமன்றி, வெளிநாட்டவர்களும் இங்கு மிகுந்த ஆர்வத்துடன் வருகை தருவதுண்டு. அப்பகுதியில் காணப்படுகின்ற ஆயிரக்கணக்கான கடற்சிங்கங்கள்தான் இதற்கு முக்கிய காரணமாகும்.

காலைநேரங்களில் மேற்படி கடற்சிங்கங்கள் இத்துறைமுகப் பகுதியில் கடலின் மேல்பகுதிக்கு வந்து சூரிய வெப்பத்தைப் பெற்றுக்கொள்கின்றன. இவ்வாறு ஆயிரக்கணக்கான கடற்சிங்கங்கள் ஒரே சமயத்தில் கடலின் மேல் மட்டத்தில் காணக்கிடைக்கின்ற காட்சி ரம்மியமானதாகவே இருக்கும்.

ஆனால், கடந்த வருடம் டிசம்பர் மாதம், மக்களுக்கு இதில் ஏமாற்றமே மிஞ்சியது. வழமைக்கு மாறாக கடற்சிங்கங்களுக்குப் பதிலாக அந்தப் பகுதி வெறுமையாகவே காணப்பட்டது.

ஆயிரக்கணக்கில் இருந்த கடற்சிங்கங்கள் எங்கோ மறைந்துவிட்டன. ஒரே இரவிற்குள் இது எவ்வாறு சாத்தியப்பட்டது? அவற்றிற்கு என்ன நடந்தது? இதற்குப் பதில் தெரியாமல் அனைவரும் தடுமாறினர்.

கடற்சிங்கங்கள் காணாமல் போய்விட்டன என்பதை அறிந்தவுடன் கடலில் அவற்றைத் தேடும் படலமும் முடக்கிவிடப்பட்டது. ஆராய்ச்சியாளர்களுக்கும் இது பெரும் குழப்பமாகவே அமைந்தது.

சில வாரங்களின் பின்னர் தேடுதல் பணிகள் நிறைவு பெற்றன. அந்த கடற்சிங்கங்கள் 'ஓரெகன்' பிராந்தியத்திற்கு அருகாமையிலுள்ள கடற்பகுதியை நோக்கி இடம்பெயர்ந்துவிட்டன என்பது ஜனவரி 8 ஆம் திகதி கண்டறியப்பட்டது.

குறித்த கடற்சிங்கங்கள் தமது நீண்டகால வசிப்பிடத்தை ஏன் இவ்வாறு மாற்றிக்கொண்டன என்பது குறித்து பல்வேறு விதமான கருத்துக்கள் கூறப்படுகின்றன.

கடற்பகுதி ஆராய்ச்சியாளர்களின் கருத்தின்படி, குறித்த தினத்தன்று கலிஃபோர்னியா கடற்பகுதியில் சிறிதளவில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாகவே கடற்சிங்கங்கள் மற்றுமொரு இடம்நோக்கி நகர்ந்து சென்றுவிட்டன என்று கூறுகின்றனர்.

இன்னும் சிலரோ, உரிய தீனி (உணவு) வகைகள் இல்லாமையின் காரணமாக தமக்கான உணவைத் தேடியே வேறு இடம் நோக்கிச் சென்றுவிட்டன என்று குறிப்பிடுகின்றனர்.

மற்றுமொரு ஆராய்ச்சிக் குழுவினர்கள், குறித்த கடற்பகுதி அதிக வெப்பமடைந்து வருவதன் காரணமாகவே அவை வேறு இடம் நோக்கிச் சென்றுவிட்டன என்று கூறியுள்ளனர்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினரால் 2010, ஜனவரி மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 27, 2010.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org